உ





12 MAY 2001

# ஞானச்சுடர்

## சித்திரை மலர் 2001




வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

சிவமயம்



# குறள் வழி

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

பொருள் :

ஒருவருக்கு ஒரு பிறப்பில் கற்ற கல்வி ஏழு பிறப்பிற்கும் துணை புரியும்.



உ

# நற்சிந்தனை

## நானுமவனே நீயுமவனே

ஊனு மவனே உயிரு மவனே
நானு மவனே நீயு மவனே
கோனு மவனே குருவு மவனே
மானும் வார்த்தை பிறிதறி யேனே.

அறியும் பொருளும் அறிபடு பொருளும்
செறியும் பொருளும் செறியாப் பொருளும்
குறியுங் குணமு மற்ற கோவென
அறிவா ரீண்டு பிறவா ராமே.

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் -40

2001 சித்திரை

பொது சன நூலகம்
12 MAY 2001
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அறுகம் புல்லின் மகிமை | 1 - 4 |
| வான் சிறப்பு | 5 - 6 |
| தர்மம் | 7 - 9 |
| வாதவூரர் அன்பினால் பெற்ற இன்பம் | 10 - 13 |
| திருப்பரங்குன்றுறை தெய்வானை மணாளன் | 14 - 17 |
| முருக மூர்த்தம் பற்றிய பல்வேறு வரலாறுகள் | 18 - 21 |
| மானுடத்தை மேன்மைப்படுத்தும் ... ... | 22 - 26 |
| ஸ்ரீ முருக மந்திரம் | 27 - 32 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதிக்கந்தன் திருத்தல புராணம் | - 33 |
| சந்நிதியான் | 34 - 36 |
| பங்குனி உத்தரத் திருநாளிலே | - 37 |
| தவத்திரு வே. முருகேசுசுவாமி அவர்களின் ... ... | - 38 |


அன்பளிப்பு : மலர் ஒன்று 30 /- ரூபா
வருடச்சந்தா தபால் செலவுடன் 385/- ரூபா.
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்
தொண்டைமானாறு.

# "ஞானச்சுடர்"
# பங்குனி மாத வெளியீடு

வெளியீட்டுரை:-

பங்குனி மாத மலருக்கான வெளியீட்டுரையை பண்டிதரும் எமது பேரவையின் போஷகருமான சிவஸ்ரீ கை. நமசிவாயக்குருக்கள் அவர்கள் வழங்கினார்கள்.

இங்கே இடம்பெறுகின்ற செயற்பாடுகள் அனைத்தும் சமூகத்திற்கு நன்மையளிக்கக் கூடியதும், தர்மம் நிறைந்ததுமான பணிகள் என்பதைக் குருக்கள் அவர்கள் குறிப்பிட்டு அதன் ஒரு அங்கமாகவே ஞானச்சுடர் வெளியீடு என்பதையும் சபையினருக்கு எடுத்துக் கூறினார்கள்.

மதிப்பீட்டுரை:-

பங்குனி மலருக்கான மதிப்பீட்டுரையை திரு. இரா. செல்வவடிவேல் அவர்கள் மேற்கொண்டார்கள். அவர் தமது ஆரம்ப உரையில் ஒரு மலரை வெளியிடுதல் என்பதே பிரச்சனைகள் நிறைந்த ஒரு விடயமாகும். இந்தநிலையில் ஞானச்சுடர் தொடர்ந்து பலவருடங்களாக வெளிவந்து கொண்டிருப்பது என்பது இறைவனின் திருவருளாலேயே இடம்பெறக்கூடியது என்பது புலனாகின்றது எனக் குறிப்பிட்டார்.

இன்று நூல்களை வெளியிடுவோர் முகப்பு அட்டை கவர்ச்சியாக இருந்தால் போதுமானது என்ற வகையிலேயே செயற்படுகின்றனர். ஆனால், ஞானச்சுடரின் முகப்பு பல்வேறுவகையான இருள் என்ற அறியாமையைப் போக்குகின்ற தன்மையுடையதாக அமைந்திருப்பது, அதன் புனிதத்தையும் வெளிவரும் நோக்கங்களையும் வெளிப்படுத்துவதாக அமைந்திருப்பதை எடுத்துக் காட்டினார்.

திரு. செல்வவடிவேல் அவர்கள் மலரில் இடம்பெற்ற கட்டுரைகளை விமர்சனரீதியாக மதிப்புரை செய்ததுடன் சில ஆலோசனைகளையும் வழங்கினார்கள். திருக்குறள் போன்றவற்றிற்கும் கூட காலத்திற்கேற்றவாறு புதிய கோணத்தில் விளக்கங்கள் கொடுப்பது விரும்பத்தக்கது என்பதையும் சுட்டிக் காட்டினார்கள்.

இறுதியாக ஆண்டவனைத் தரிசிப்பதால் நாம் எமது உள்ளத்தை பக்குவமடையச் செய்கின்றோம். ஆகவே, எமது உள்ளமே ஒரு ஆலயம் எனக் குறிப்பிட்டார்கள்.

# சுடர் தரும் தகவல்

கடந்த இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்றுவரும் யுத்த அனர்த்தங்க ளால் மக்கள் அனுபவித்துவரும் துன்பியல் அனுபவங்களில் மனதை உருக்கக் கூடியதும், மனிதாபிமான ரீதியில் அதிகம் சிந்திக்கவேண்டியதுமான விடயம் அநாதைப்பிள்ளைகள் பற்றியதாகும். பல்வேறு காரணங்களால் சமூகத்தில் அநாதை சிறார்கள் தோன்றுவதாகக் கருதப்பட்டாலும் யுத்தச்சூழல் அநாதைச் சிறார்கள் எண்ணிக்கையை அதிகரித்துள்ளதை யாரும் மறுக்கமுடியாது.

தாய், தந்தை இருவரும் இறந்ததினாலோ அல்லது தாய், தந்தை இரு வரில் ஒருவர் இறக்க நேரிட்டதனால் மற்றவர் வேறு திருமணம் செய்வதினாலும் இந்த நிலமைகள் ஏற்படலாம். இவற்றைவிட தாய் தந்தை இருவருமே வெவ் வேறு திருமணங்கள் செய்து பிரிந்துசெல்லும் பொழுதும் இந்த அநாதைப்பிள்ளை கள் உருவாக்கப்படுகின்றனர். கூட்டுக்குடும்ப நிலமைகள் அருகிச்செல்வதும், மோசமான இடப்பெயர்வுகளும், யுத்தத்தினால் உறவினர் உயிர் இழத்தல் போன்ற காரணங்களும்கூட இந்த அநாதைப்பிள்ளைகளின் நிலமைகளை மோச மடையச் செய்வதாகக் கருதப்படுகிறது.

இந்தச் சிறார்கள் அநாதைகள் ஆக்கப்பட்டதற்கான பின்னணிக்காரணங் களும், அவர்கள் தமது பெற்றோரினதும், உற்றாரினதும் அரவணைப்புகள் இன்றி ஒவ்வொரு நாள் பொழுதையும் ஏக்கத்துடன் கழிக்கின்ற வாழ்க்கை முறையும் எமது உள்ளத்தை உருக்கக்கூடியதாகும். மற்றவர்களின் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் ஏங்கும் இவ்வாறான பிஞ்சுஉள்ளங்களின் பதகளிப்பு நிலையை அவர்களின் இடத்தில் நின்று சிந்திக்கும்பொழுதுதான் எம்மால் அதனை முழு மையாக உணரமுடியும்

எமது சமயத்தின் பலவீனத்தையும், சமூகத்தில் இவ்வாறான சிறார்கள் அதிகரித்துச் செல்வதையும் தமக்குச் சாதகமாக்கிச் சில பிரிவினர் உதவிகள் வழங்குதல், ஆதரவு வழங்குதல் என்ற போர்வையில் நேரடியாகவும், மறைமுக மாகவும் அந்த அநாதைச்சிறார்களையும் மற்றும் மிகவும் வறியகுடும்பத்துச் சிறார்களையும் அவர்களின் சொந்த மதத்திலிருந்து அந்நியப்படுத்தி தமது பிரி வுக்கு ஆற்றுப்படுத்துவதையும் நாம் அவதானிக்க முடிகிறது.

இவ்வாறான மாற்றுப்பிரிவினர்களது தாக்கம் எமது பகுதி உட்பட வடக்குக்கிழக்குப் பகுதி முழுவதும் காணப்பட்டாலும், வவுனியா போன்ற எல் லைக் கிராமங்களில் இவை கூடுதலாக இடம்பெறுவதையும் நாம் அவதானிக்க முடிகிறது.

ஆகவே எமது சமயத்தை வழிநடாத்துபவர்கள், வளர்ப்பவர்கள், சமயத் தொண்டில் ஈடுபடுபவர்கள், வசதிபடைத்தவர்கள், என்ற அனைத்துப் பிரிவின ரும் இவ்வாறான அநாதைச்சிறார்களின் துன்பங்களைப் போக்குகின்ற தர்ம காரியங்களில் ஈடுபடுவதுடன் எமது சமயத்தை எதிர்நோக்கும் சவால்களுக்கும் முகம் கொடுப்போமாக.

# செல்வச்சந்நிதி முருகா!

சூரனை அடக்கி அருள் தந்த முருகா
வீரவேல் துணையெமக்கு என்றுமே ஐயா
கரங்கள் பன்னிரெண்டு கொண்டு அருளுகின்ற முருகா
இரங்கி வந்து எமக்குத்துணை செய்திடுவாய் ஐயா.

வடஇலங்கைக் கரையினிலே குடிகொண்ட முருகா
ஓடவிட்டு வேடிக்கை பார்ப்பதேன் ஐயா
வேடுவன் திருமகளை மணந்தவனே முருகா
நாடெங்கும் நல்லமைதி காத்திடுவாய் ஐயா.

செல்வமிகு சந்நிதியில் கோயில் கொண்ட முருகா
நல்லருளை எமக்களிக்கத் தயங்குவதேன் ஐயா
வல்லமையைத் தந்திடவே வந்திடுவாய் முருகா
அல்லல் அகற்றிடவே துணைபுரிவாய் ஐயா.

போர்க்களமாய் உன்பதியும் இருப்பதேன் முருகா
பார்போற்றும் இளங்குமரா சொல்லிடுவாய் ஐயா
நார்நாராய் உன்னடியார் சிதைவதேன் முருகா
தேர்ஏறிப் பவனிவரத் தயங்கிவரும் ஐயா.

சண்முகனே, சரவணனே சரணம் நீ முருகா
மண்ணில் இனி குருதி சிந்தும் கொடுமைதீர் ஐயா
உண்மை யெங்கும் நிறைந்திடவே உறுதிசெய்வாய் முருகா
எண்ணமெல்லாம் உன் பெருமை நிறைந்திடட்டும் ஐயா.

ஆறுபடை வீடுகொண்ட முத்தமிழே முருகா
ஆறுதலை எமக்களிக்க ஓடிவா ஐயா
மாறுபட்டு அழியும் நிலை போக்கிடுவாய் முருகா
வீறுகொண்டு உயர்ந்திடவே கருணைதரும் ஐயா.

த. மனோகரன்

# சித்திரை மாத சிறப்புப் பிரதி பெறுவோர்

திரு. சி. பத்மநாதன்
( முகாமையாளர் மக்கள்வங்கி, யாழ்ப்பாணம் )

திரு. T. சிவராஜ்
( தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம் )

தலைவர்
( சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் )

திரு. நா. குகன்
( குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை )

திரு. சோ. பாலேந்திரன்
( பாலன் விற்பனை நிலையம், பருத்தித்துறை )

திரு. இ. மனோகரன்
( மனோ லைற், கோப்பாய் )

திரு. மு. சுஸ்ருதன்
( யாழ்ப்பாணம் )

திரு. தா. முத்துவேலு
( சந்நிதி வீதி, உடுப்பிட்டி )

திரு. சு. அருள்ஜயா
( ஆனைக்கோட்டை )

திரு. S. சந்திரகுலம்
( துஷி மினிசினிமா, ஆவரங்கால் )

திரு. க. அரியகுட்டி
( அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு )

திரு. சி. கணபதிப்பிள்ளை
( தலைவர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் )

திரு. ஆ. இ. அருணகிரிராசா
( வர்த்தக முகாமையாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் )

திரு. அ. தவராசசிங்கம்
( களஞ்சியப் பொறுப்பாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் )

திரு. சி. இன்பராசா
( காசாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் )

திரு. சி. இராசதுரை
( கிளை மேற்பார்வையாளர் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் )

திரு. சி. பஞ்சலிங்கம்
( லிகிதர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் )

திரு. சி. விபுலானந்த அடிகள்
( லிகிதர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் )

திரு. க. ஜெயரத்தினம்
( சாரதி, உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் )

திரு. கு. மாணிக்கராசா
( கிளை முகாமையாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் )

திரு. த. சண்முகவடிவேல்
( காரியாலய உதவியாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் )

திரு. த. இராஜேஸ்வரன்
( கிளை முகாமையாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் )

உ

# அறுகம்புல்லின் மகிமை

ந. தயாளினி



விநாயகக் கடவுளுக்கு மிகவும் சிறந்ததாக அறுகம்புல் கூறப்படுகின்றது. எனவே, அவ்வாறு மகிமை பெறுகின்ற அறுகம்புல்லினது மகத்துவத்தினை நோக்கலாம். சுலபன் என்ற அரசன் அவந்தி பட்டணத்தில் ஆட்சிசெய்து வந்தான். அவனது மனைவியின் பெயர் சுபத்திரை என்பது. நீதிநெறி தவறாது ஆட்சிசெய்து வந்தபோது ஒரு நாள் அந்தணன் ஒருவன் அரசனிடம் யாசகம் பெறவந்தான். அவன் தோற்றம் மிகவும் பரிதாபமாய் இருந்தது. வறுமையால் மெலிந்திருந்தான். கந்தல் ஆடையை உடுத்திருந்தான்.

மதுசூதனன் என்ற அந்த அந்தணன் மீது அரசன் இரக்கங்கொள்வதற்குப் பதிலாக, அவனைக் கேலி செய்தான். மதுசூதனன் பக்தியுள்ளவன். அரசனின் நகைப்பைக் கண்டதும் அவனுக்குக் கோபம் மேலிட்டது. "அரசே! என் தோற்றத்தைக் கண்டு நகைத்தாய். இந்த அடாத செயல் உன்னை மட்டும் அன்றி உன்குலத்தையும் சுட்டுவிட்டது நீ எருதாகப் பிறக்கக்கடவாய்" என்று சபித்தான்.

அரசனுக்கு நேர்ந்த துன்பத்தைக்கண்டு சுபத்திரை பெருந்துயருற்றாள். அவளால் அதைப் பொறுத்துக்கொள்ளவே முடியவில்லை. "யாசிக்க வந்த வேதியனே! பெரியோர்கள் ஒருபோதும் பொறுமையை இழப்பதில்லை. நீயோ அவசரப்பட்டு ஒரு கழுதையைப்போன்று அறிவில்லாது நடந்துகொண்டாய். ஆகவே நீயும் கழுதையாகப் பிறந்து அழுக்கைச் சுமந்து திரிவாயாக" என்று சபித்தாள்.

மதுசூதனனுக்குக் கோபம் அதிகரித்தது "அம்மணி குற்றத்தை உணர்ந்து அதற்கு மன்னிப்புக் கேட்கவேண்டியது உங்கள் கடமை. அதைவிடுத்து நீச ஸ்திரீயைப் போன்று எனக்குப்

புத்திபுகட்ட முற்பட்டதோடு அல்லாமல் என்னையும் சபித்தீர்கள். அதனால் நீங்களும் சண்டாளப் பெண்ணாக மாறக்கடவது '' என்று சபித்தான்.

கால வசத்தால் மூவரும் ஒருவரையொருவர் இவ்வாறு சபித்துக்கொள்ள நேர்ந்தது. அதன் பலாபலன்களை அவர்கள் அப்போதே அனுபவிக்கத் தொடங்கினர். சுலபன் எருதாக மாறி அந்த நகரத்தில் இருக்கும் உழவன் ஒருவனிடம் சென்று அடைந்தான். மதுசூதனன் கழுதையாகி வண்ணானிடம் போய்ச்சேர்ந்தான். சுபத்திரை சண்டாளப் பெண்ணாகி அந்நகரத்தின் எல்லையிலிருக்கும் சேரியை அடைந்தாள்.

ஒருநாள் எருதும் கழுதையும் ஒரு வயலில் மேய்ந்து கொண்டிருந்தன. அங்கு சண்டாளப்பெண்ணும் புல் அறுத்துக் கொண்டிருந்தாள். அச்சமயம் வானில் மேகங்கள் சூழ்ந்து இடி மின்னலோடு பெருமழை பெய்யத் தொடங்கியது. காற்றும் மூர்க்கமாய் வீசியது. மூவரும் அருகிலிருந்த விநாயகர் கோயிலின் முன் மண்டபத்திற் சென்று ஒதுங்கினர். மழையும் காற்றும் விடாது அடித்தன. மாலை மறைந்து இரவுநேரமும் வந்தது. ஆலயத்தை விட்டு அவர்கள் வெளிவர முடியவில்லை. அந்தப் பெண் புல்லுக்கட்டை ஒரு மூலையில் வைத்திருந்தாள். கழுதை அதைக்கண்டு புல்லை இழுத்துத் தின்றது. அந்தப்பெண் கழுதையைத் தடிகொண்டு அடித்தாள். கழுதை மிரண்டு பின்னங்கால்களால் எருதை உதைத்தது. இரண்டும் சண்டையிட்டுப் பெண்ணின் மீது மோதின. முன் மண்டபத்தில் ஒரே களேபரமாக இருந்தது.

உள்ளே மாலைநேரப் பூஜையைச் செய்துகொண்டிருந்த முனிவர்கள் அந்தச் சப்தத்தைக் கேட்டு வெளியே வந்தனர். மூவரையும் வெளியே விரட்டினர். வெளியில் பெருமழையாக இருந்தபடியால் மூவரும் கோயிலைச் சுற்றிச்சுற்றி அலைமோதினர். சண்டாளப்பெண்ணைத் துரத்தினர் அந்தப் புல்லுக் கட்டிலிருந்து எருதும் கழுதையும் புல்லை இழுத்து மேய்ந்தன. சில புற்கள் மூவர் மீதும் விழுந்தன.

சண்டாளப்பெண் கொண்டு வந்த புல்லினால் கோயிலில் தீட்டுப்பட்டுவிட்டதென்று முனிவர்கள் புதிதாகப் பூஜை செய்தனர். இரவெல்லாம் மழையால் நனைந்து காலையில் மூவரும் கோயில் மண்டபத்தில் இறந்து கிடந்தனர் அம் மூவரையும் தமது லோகத்திற்கு அழைத்துச் செல்ல விநாயகப்பெருமான் கணங்களோடு திவ்விய விமானத்தை அனுப்பிவைத்தார். இவ்வதிசயத்தைக் கண்ணுற்ற முனிவர்கள் கணங்களைப் பார்த்து

துணிவுடன் துணையும் இருத்தல் வேண்டும்.

"நியமம் நிஷ்டை என்பவற்றைக் கொஞ்சமும் புரியாத இவர்களுக்கு இந்தப் பாக்கியம் வந்தவிதம் எவ்வாறு? என்று கேட்டனர். அவர்கள் கூறிய விடை வருமாறு.

"முனி சிரேஷ்டர்களே! அறுகம்புல்லைக் கொண்டு விநாயகரைப் பூசித்த பலனைப் பெற்றதால் மானுடப்பிறவியை விடுத்துத் தெய்வ சரீரம் பெற்று வானுலகம் செல்கின்றனர் என்றனர். அறுகம்புல்லின் மேன்மையை குறித்து அவர்கள் மேலும் கூறியதாவது.

---

தாபரம் என்ற நகரத்தின் தென்பக்கத்தில் பனைமரங்கள் நிறைந்த தோப்பு ஒன்றிருக்கிறது. அங்கே கவுண்டில்யர் என்ற முனிவர் இருந்து வந்தார். அவருடைய தர்மபத்தினியின் பெயர் ஆசிரியை என்பது. முனிவர் விநாயக பக்தர். அவர் நாள் தோறும் காட்டிற்குச் சென்று அறுகம் புற்களைக் கொண்டு வந்து அர்ச்சனை செய்து வருவது வழக்கம்.

"மணம் வீசும் மலர்கள் பல இருக்க அவைகளை விட்டு விட்டு அறுகம் புல்லினால் அர்ச்சனை செய்கிறீர்களே, இதன் காரணமென்ன? என்று அவரது தர்மபத்தினி கேட்டார். சொல்ல ஆரம்பித்தார் முனிவர்.

ஒரு சமயம் யமதர்மராஜன் தன்னைச் சேர்ந்தோர் சூழ்ந்திருக்கச் சபையில் அமர்ந்து தேவ மாதர்களின் அற்புத நடனத்தைக் கண்டு, இரசித்துக் கொண்டிருந்தான். நடனமாதர்களில் ஒருத்தியான திலோத்தமை ஆடிக் கொண்டிருந்த போது மேலாடை நழுவி விழுந்தமையால் நாணமுற்று அங்கிருந்து சென்றாள். அவள் மேனியழகைக் கண்டு யமதர்மராஜன் விரக தாபம் அடைந்தான். அங்கிருந்து எழுந்து சென்றான். பொறுக்க முடியாத விரகத்தால் அவனுடைய தேஜஸ் வெளிப்பட்டது. அதிலிருந்து கொடிய அரக்கன் ஒருவன் தோன்றினான். எல்லாரும் கதிகலங்கி நாலாபக்கமும் ஓடினர். யமதர்மராஜனும் அச்சங்கொண்டான். அந்தப்புரத்தில் நுழைந்து கதவுகளை உட்புறம் தாழிட்டுக் கொண்டான்.

அனலாசுரன் செருக்கடைந்து தேவர்களைத் துன்புறுத்த ஆரம்பித்தான். அவர்கள் நாராயணனிடம் அடைக்கலம் புகுந்தனர். எல்லோரும் சேர்ந்து விநாயகப் பெருமானிடம் சென்றனர். அங்கும் அனலாசுரன் தேவர்களைத் தொடர்ந்து வந்தான்.

நெருங்கி வந்த அசுரனை விநாயகர் துதிக்கையால் தூக்கி, அவனை விழுங்கிவிட்டார். எம்பெருமானின் வயிற்றுக்குள்ளே அசுரன் சென்றதும் வெப்பம் தோன்றியது. பிரம்மாதி தேவர்கள் என்ன செய்வதென்று தோன்றாமல் விழித்தனர். விநாயகப்

---

பெருமானுக்குஏற்பட்டஉஷ்ணத் தைத் தணிக்க உபாயங்களை மேற்கொண்டனர். குளிர்ந்த நீரால் அபிஷேகம் செய்தனர். சந்தனத்தைப் பூசினர். அமுதத்தை மேனியில் தெளித்தனர் உஷ்ணம் குறைந்தபாடில்லை.

பிறகு முனிவர்கள் அறுகம் புல்லைக்கொண்டுவந்து சொரிந் தனர். அப்போதுதான் விநாயக ரைத் தகித்து வந்த வெப்பம் தணிந்தது. விநாயகப்பெருமான் முனிவர்களைப் பார்த்து "நீங்கள் அர்ச்சனை செய்த அறுகம் புற்கள் என்னிடம் தோன்றி யிருந்த உஷ்ணத்தை நீக்கிவிட்டன. அதனால் இனி எனக்குச் செய்யும் எந்தப் பூஜையிலும் அறுகம்புல்லைச் சேர்க்க வேண்டும். அறுகம்புல் அர்ச்சனையே போதுமானது என்று அனுக்கிரகித்தார். தேவர்கள் மகிழ்ச்சியடைந்து, விநாயகருக்கு அவ்விடத்தில் ஆலயம் ஒன்று எழுப்பி அதில் பாலச்சந்திர விநாயகரை ஸ்தாபித்துப் பூஜைகளைச் செய்து, அவரது அருளைப் பெற்றுத் திரும்பினர். இதிலிருந்து அறுகம்புல்லின் மகத்துவத்தினை அறியக்கூடியதாக இருக்கின்றது.

## அறம்

மனிதராகத் தோன்றிய அனைவருமே மனித இயல்புகளோடு வாழ்ந்திடுவதில்லை. ஆனால் ஒவ்வொரு மனிதனும் மனிதனுக்குரிய உயர்ந்த தன்மைகளோடு வாழ்ந்திட வேண்டும் என்பதுதான் படைத்த இறைவனின் பெருநோக்கமாகும். இதனை உணர்வதற்காகவே தெளிந்த அறிவுடைய சான்றோர் பெருமக்கள் அவ்வப்போது அறநெறிகளைப் போதித்து மக்களை மேன்மைப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

உண்மையில் அறம் என்பது மாசற்ற மனத்தில் உதிப்பதாகும். மனிதகுலம் அனைத்திற்கும் இக்கருத்து பொதுவான ஒன்றாகும். எண்ணற்ற மதங்களும் மார்க்கங்களும் முடிவில் இதைத்தான் சிறப்பாக உணர்த்தி நிற்கின்றன. இதனையே உலகப்பொதுமறை தந்த தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

"மனத்துக்கண் மாசிலன்ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற" என கூறியுள்ளார்.

கல்வி கற்பதும் சமய நெறிகளில் தோய்வதும் ஆசாரச்சடங்குகளைக் கடைப்பிடிப்பதும் போன்ற யாவும் மன அழுக்கினைப் போக்குவதற்கான நல்ல பயிற்சியாகும். இந்த உயரிய நோக்கத்தை நெஞ்சினில் நிறுத்தி நடைமுறைப்படுத்தி வந்தால் நிச்சயமாக அறத்தின் பயனை அடையலாம்.

சிறந்த தர்மம் சுயநலமற்ற சேவை.

# வான் சிறப்பு

« செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் »



நான்காவது குறளில் மழை வளம் குன்றினால் வரும் ஆபத்தினைக் குறிப்பிடுகின்றார்.

உலகை வாழவைக்கும் உழவர் மழையில்லையானால் உழவு செய்யார். திருக்குறளிலே பல இடங்களில் திருவள்ளுவர் உழவரின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துவது சிறப்பம்சமாகும். உழவனைத் தொழுது பின் செல்லும் நிலையில் உழவர்கள் அல்லாதவர்கள் வாழும் நிலையினை எடுத்துரைக்கின்றார். மழை இல்லையானால் எத்தொழிலும் ஆற்ற இயலாது என்பதை வெளிப்படுத்தப் பின் வரும் குறளை முன்வைக்கின்றார்.

04. ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றியக் கால்.

இக்குறளை விளக்கிய மணக்குடவர் ஏரின் உழுதலைத் தவிர்வார் உழவர் புயலாகிய வாரியினுடைய வளங்குறைந்த காலத்து எனக் குறிப்பிடுகிறார். இங்கு உழவர் இல்லை என்பது உழுவார் இல்லை எனப்பொருள் கொள்ளவேண்டும் என விளக்குகிறார்.

ஐந்தாவது குறளில் வறுமையையும் செம்மையையும் ஏற்படுத்துவது மழையே என விளக்குகிறார். மழை பெய்யாது விடுகின்ற போது செல்வம் எல்லாவற்றையும் இழப்பவன் மீண்டும் இழந்தவற்றையெல்லாம் நிலைப்பதற்கு மழையே காரணமாக அமையும் சிறப்பினை பின்வருமாறு எடுத்துரைக்கிறார்.

05. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மாற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

விலையுயர்ந்த பொருள் ஆசையின்மை.

மேற்குறித்த குறளுக்கு உரை சொன்ன பரிமேலழகர் பின்வருமாறு குறிப்பிடுகிறார். பூமியின் கண் வாழ்பவரைப் பொய்யாது நின்று கெடுப்பதுவும் அவ்வாறு கெட்டவர்க்குத் துணையாய் நின்று முன் கெடுத்தாற்போல எடுப்பதூஉம் எல்லாம் மழையென இக்குறளில் ''மாற்று'' வினைமாற்றின் கண் வந்தது ''அங்கு'' என்பது மறுதலைத் தொழில் உவமத்தின் கண் வந்த உவமைச் சொல். கேடும் ஆக்கமும் எய்துதற்குரியார் மக்களே என்பதனால் இங்கு வள்ளுவர் கெட்டார்க்கு எனக் குறிப்பிடுகிறார். எல்லாம் என்ற சொல் இங்கு மக்கள் எடுக்கும் முயற்சி எல்லாவற்றிற்கும் அடிப்படை மழையே என்பதனை சுட்டி நிற்கின்றது எனலாம். இக்குறளுக்கு விளக்கம் சொன்ன பாரதியார் வாழ்வாரைக் கெடுப்பதூஉம் கெட்டாரை வாழ்விப்பதும் மழை என்றவாறு எனச் சுருக்கமாக விளக்குகிறார். மேலும் இக்குறளுக்குத்தெளிவு கூறிய காலிங்கர் பின்வருமாறு விளக்குகிறார். தான் பருவத்து வழங்காது யாவரையும் கெடுப்பதும் அங்ஙனம் கெட்டார்க்குப் பின்னுஞ் செல் சார்பாகிய உறுதுணையாய் வந்து அப்பொழுதே உள்ளவர்க்கு நட்டார் போல எடுத்துக் கொண்டு பாதுகாப்பதுவும் எல்லாம் மழையென்றார்

ஆறாவது குறளில் அனைத்து உயிர்களின் வாழ்விற்கும் காரணமாக விளங்குவது மழை; மழைத் துளி இல்லையாயின் பூமியில் சாதாரண புல்லைக்கூடக் காண இயலாது என்ற பொருளில் ஆழமாக மழையின் மகத்துவத்தை இக்குறளில் விளக்குகிறார்.

06. விசும்பின் துளிவீழின் அல்லால் மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது,

மணக்குடவர் இக்குறளுக்குப் பொருளுரைக்கும் போது வானிலிருந்து துளி வீழினல்லது அவ்விடத்து பசிய புல்லினது தோற்றமும் காண்டல் அரிது என விளக்குவதோடு மழை இல்லையானால் ஓரறிவு உயிருங் கெடும் என விரித்துரைத்துள்ளார்.

---

மனத்திலே நான்கு அழுக்குகள் இருக்கின்றன. பொறாமை, ஆசை, கோபம், பகை என்பன. இவற்றை தியானம் என்ற தண்ணீரால் கழுவ வேண்டும்.

○★○

மிகச்சிறந்த மனிதன் அன்புள்ளவன்.

உ

# தர்மம்

— சு. சிவராசா —

“ தருமமென் றொருபொருள் உளது தாவிலா
இருமையின் இன்பமும் எளிதின் ஆக்குமாய்
அருமையில் வரும்பொருளாகும் அன்னதும்
ஒருமையா னோர்க் கலால் உணர்தற் கொண்ணுமோ ”

தர்மம் என்பது தரித்து நிற்பது என்னும் பொருள் உடையது எல்லா உயிர்களையும் போஷித்து, பாதுகாத்து, வளர்த்து வருவது தர்மம்.

தர்மம் மனிதனுக்கு நற்சீரைக் கொடுப்பது. உயிர்களைப் பாதுகாப்பது அழியாப் பேரின்பத்திற்கு வழிகாட்டுவது. அனைவரையும் அரவணைத்து உலக சகோதரத்துவத்தை வளர்ப்பது தர்மத்தின் பாற்பட்டதே. தர்மம் இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தைக் கொடுக்கிறது. தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளும் தன்மைக்குத் தர்மம் என்று பெயர். ஒருவனை உணர்த்துவது எதுவோ? அதுவே தர்மம். ஆண்டவனுடன் நேரடியான உறவை வைத்துக் கொள்ள நமக்கு உதவுவது இறையுணர்வு எனும் மெய்யுணர்வு பெறுதலே தர்மம். இந்து மத நூல்களின் இதயமே தர்மம்.

“ அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம் ”

என்று வள்ளுவன் கூறுவான் அறத்தான் வருவதே இன்பம் என்றும் அவனே பேசுவான் நல்லொழுக்கமே தர்மத்திற்கு ஊற்று. தர்மம் கால, தேச, வர்த்தமானங்களைக் கடந்து அதீதமாய் நிலைத்து நிற்பது எல்லா மதங்களும் தருமத்தைப் பற்றியே பேசுகின்றன ஆயினும் நமது இந்து மதம் பேசுகின்ற முறை அனாதியானது,

நமது இந்து தர்மம் வேதங்களை அடியொற்றி வந்தது வேதம் என்றால் அறிவு எனப்

பொருள் தரும் வேதங்களிற் சொல்லப்பட்டவற்றை அறிவு பூர்வமாகச் சிந்தித்துத் தெளிந்தவை ஸ்மிருதிகள் எனப்படும். இந்த ஸ்மிருதிகளைத் தமிழில் தர்ம சாஸ்திரங்கள் என்கிறோம். இப்போதுள்ள தர்ம சாஸ்திரங்கள் 18 என்பர் இது சூத்திரம், சுலோகம், வியாக்கியானம் ஆகிய மூன்று வகைகளில் சொல்லப்பட்டுள்ளது தர்ம சாஸ்திரங்கள் வர்ணம். ஆச்சிரமம், புருடார்த்தம் என்னும் முப்பொருள்களைப் பற்றி முக்கியமாகப் பேசுகின்றன.

அந்தணன், அரசன், வைசியன், சூத்திரன் முதலிய நான்கு வருணத்தாரும் செய்ய வேண்டிய அறங்களைப்பற்றிக் கூறுவது வருண தர்மமாகும்.

பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகிய நிலைகளுக்குரிய தர்மங்களைப்பேசுவது ஆச்சிரம தர்மமாகும்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நெறிகளைப்பற்றிப் பேசுவது புருடார்த்த தர்மமாகும்.

'' துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை''

என்றவாறு இல்லறத்தானின் கடமைகளைப் '' பஞ்சமகாயக்ஞங்கள் '' என்று கூறுகின்றன. அவை தேவயக்ஞும் ( இறைவன் ) ரிதியக்ஞும் ( முனிவர் ) பிதிர்யக்ஞும் (இறந்தவர்) பூதயக்ஞும் (பிராணிகள்) அதிதியக்ஞும் ( விருந்தினர் ) என ஐந்து யாகங்களுமாய்.

இல்லறத்தானின் கடமைகளை முக்கியமாகப் பேசப்படுதலின், '' இல்லறமல்லது நல்லறமன்று '' என்பது உணரப்படும்.

தர்மசாஸ்திரங்கள் பதினெட்டினுள் ஞாக்யவல், மனு, பராசரர் ஆகிய மூவரும் செய்தவையே முக்கியமானவை.

ஆதித்தன் குலமுதல்வனாகிய மனுவில் மனு தர்மசாஸ்திரமே பெரிதும் வியாபகமுற்றதால் நீதிக்கு மனுவென்றும், நீதியைத் தொகுப்பவருக்கு மனு என்றும் கூறப்படலாயிற்று. அநபாயசோழன் மனுநீதிச்சோழனெனப் போற்றப்படுவதையும், இலங்கையில் எல்லாளன் மனுநீதிச்சோழனெனப் போற்றப்படுவதையும் நாம் அறிகிறோம். அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றமாகும் என்று கூறுவதையும் காண்க.

தர்மத்தைப் பற்றிக் கூறும் நூல்கள் ஏராளம் இருக்கின்றன. வடமொழியில் - வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசம், கீதை,

மிகப்பலமுள்ள மனிதன் பொறுமைசாலி.

தர்மசாஸ்திரம் - தமிழ்மொழியில் - 12 திருமுறை, 14 மெய்கண்டசாஸ்திரம், நாலடியார், ஆத்திசூடி, சிலப்பதிகாரம், மணிமேகலை, தொல்காப்பியம், திருமந்திரம், பரிபாடல் என்பனவாகும்.

இந்த உலகம் இடுக்கண் இன்றி இயங்கிக்கொண்டிருப்பதற்குத் தர்மமே அச்சாணியாக இருக்கின்றது. என்பது மிகையான பேச்சல்ல. தருமத்தை நூல்களில் மட்டும் வைத்துக் கொண்டு இருப்பதால் எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை. படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோயிலாக இருக்கின்ற நிலையே இன்று பெரிதும் காணப்படுகிறது. கூட்டத்திற் கூடிநின்று பிதற்றலன்றி நாட்டத்தில்யாரும் கொள்வதாகவும் தெரியவில்லை. தனக்கு மூக்குப் போனாலும் அடுத்தவனுக்குச் சகுனப் பிழையாக இருந்துவிட்டுப் போவதிலேயே கருத்தாக இருக்கின்றனர்.

" திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்பது பட்டுக்கோட்டையாரின் பாட்டு. ஒவ்வொரு மனிதனும் தன்னால் இயன்றளவு தனக்குரிய தருமங்களைக் கடைப்பிடித்து ஒழுகினால் அன்றி உலகில் தருமத்தை நிலைநிறுத்த முடியாது. மனிதனுக்குத் தருமத்தை சொல்வதற்கு இறைவனால் கொடுக்கப்பட்டது மனசாட்சி.

' தன் நெஞ்சத்தறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன் நெஞ்சே தன்னைச்சுடும் ''

ஆதலால் எவரும் தருமத்தின் உபாதையில் இருந்து தப்பி விடுவதற்கு இல்லை. சராசரி மனிதர்களாகிய நாம் அடுத்தவர் மனம் புண்ணாகும் வண்ணம் வார்த்தைப் பிரயோகம் செய்யாது இருத்தலே இக்காலத்திற் சிறந்த தவமாகும். சுடு சொற்களை மட்டுமன்றி நடிப்புச் சொற்களையும் பேசி உலகையும் தம்மையும் ஏமாற்றி வாழ்கின்றனர். இவ்வாறு ஏய்த்துப் பிழைத்தலும் ஏமாற்றி வாழ்வதும் பெரும் கேடாகும். தருமம் ஒரு சமயம் தோற்பது போலத் தெரிந்தாலும் இறுதியில் அதுவே வெல்லும். தருமத்தின் வாழ்வு தன்னைச் சூது கவ்வும். தருமம் மறுபடி வெல்லும் என்ற பாரதியின் வார்த்தைகளை மனத்தில் நிறுத்தி நாம் வாழ்வது அவசியமாகும். இவ்வுலகில் வாழும் நாம் . நமக்குக்கிடைத்த இவ் அரிய மானுடப் பிறவியைப் பயன் உள்ளதாக்குவதற்குத் தருமம் என்று சான்றோராற் சொல்லப்படுபவற்றை வாழ்க்கையில் அனுசரித்து வாழ்ந்து நற்கதி அடைவோமாக!

மிகவும் கெட்டவன் சுயநலக்காரன்.

உ

சிவமயம்

# வாதவூரர் அன்பினால் பெற்ற இன்பம்

/ சிவ. சண்முகவடிவேல் /

திருவாதவூரருக்குக் குரு பத்தி என்ற விதை அருச்சனை வயலுள் விதைக்கப்படுகின்றது. அது சிவ அன்புப் பயிராக உள்ளத்திற் செழித்து வளர்கின்றது. உரிய காலத்திற் பயனுள்ள அறுவடையாகப் பயன் அளிக்கின்றது. அந்தப்பயன் திருவாசகத்தைப் பிழிந்து எடுத்த சாறு. அந்தச் சாறு கருணைத்தேன். நுகரநுகரத் தெவிட்டாது தித்திக்கும் அத்தேன் - இன்பம். அழிவில் இன்பம். வீட்டின்பம். முத்திப்பேறாகிய அருள். ஆரமுதம்.

வம்பனாய்த் திரிந்தாரை வா என்று அழைத்து வடிதிரிசூலத்தார் வழங்கிய அருளாரமுதம் அத்துவித முத்தி. உலகவர் பித்தன் என்றார்கள். வித்தகனார் அவர் பத்திமை கண்டு சித்தம் என்னும் திண் கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்தார். வாதவூரர் பேரா அன்பு பெருக்கினார். வாராத இன்பம் வாய்க்கப்பெற்றார். அதனால் கண்ணுதற் பெருமானைக் கற்றாவின் மனம் போலக் கசிந்து உருகிக் களிப்பார். " இன்பமே என்னுடைய அன்பே. "

மண்ணுலகத்தில் மானுடப் பிறப்பின் மாட்சிமை எல்லாம் மனத்தில் தங்கி இருக்கின்றது. மனம் போனபோக்கில் அலையவிடக்கூடாது. அன்பு நாரினால் மனத்தறியில் இறைவனுடைய திருப்பாதத்தை இறுகப்பிணைத்துக்கொள்ள வேண்டும். அந்த நிலைநின்று தன்னை அறிய வேண்டும். வாதவூரர் தம்மை அறிந்து கொண்டாராதலின், " யானே பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய் " என்று ஓர்ந்து கொண்டார். உணர்ந்தவர் உண்மை அன்பை ஆராய்ந்தார். ' கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு ' மெய்யன்பு எனக்கண்டார். திருவாதவூரர் சிவபிரானிடத்தில் மெய்யன்பர் ஆனார்.

பொய்யன்பிற்கு கருணை காட்டும் மெய்ப்பொருள் வாதவூரரின் மெய்யன்புகண்டு வாழா இருப்பாரா?

கருணைக்கடல் காதலனுக்குக் கருணை புரிந்தார். உள்ளம் உருகிக் கள்ளம் கைவிட்டு வெள்ளம் போலக் கண்ணீர் பெருக்கும் பேரன்பாளருக்காக நிலவுலகத்தில் எழுந்தருளி வந்தார்.

பிழை செய்தல் மனிதவியல்பு.

நீண்ட கழல்கள் அணிந்த திருவடிகளோடு, செந்தாமரைக்காடனைய தனிச்சுடர்த் திருமேனியைத் தந்தருளினார்.

உன்னாதார் உள்ளத்தில் ஒழிந்திருக்கும் ஒளி வடிவினர் எம்பெருமான். வாதவூரரின் கன்னெஞ்சைக் கனிவித்தார். நீராய் உருகியது. உயிர்க்குஉயிரானார். உள்நின்று உணர்த்தாது உணர்த்தினர். வாதவூரரின் சிந்தனை ஊற்றுள் உண்ண உண்ணத் தெவிட்டாத தெள் ளமுதம் ஆனார்.

இரும்பு மனத்தை இழுத்து இழுத்து எலும்பிற்கும் உயிர் ஊட்டினார். திருவடிகள் கரும்பை ஒத்த சுவையினைத் துய்க்க வைத்தார். அந்த அநுபவத்தில் வாதவூரர் தன்னையும் அறியார். பகல் இரவு வேறுபாடு படுத்துணராதவரானார்.

கடவுள் வேறுபாடில்லாத கற்பனை கற்பித்தார். வாதவூரர் பேதமில்லாத கற்பு ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தார். மண்ணுலகத்தில் கணவன் மனைவியர் கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை. அது போலப் பூலோக சிவலோக வாழ்வில் சிற்றுயிரைப் பெருங்கருணைப் பேராற்றுப் பெருவெள்ளத்திற் பிணித்துப் பிற தெய்வத்திற் பெயரவிடாது காப்பது கற்பு. அது தெய்வத் திடம் பிரியாத பேரன்பு. தெய்வக் கற்பு எனலாம்.

'இறைவனே! உத்தமனே! உன்னை அல்லாது பிற கடவுளரை மனத்திலும் கருதேன்' எனப் பிறிதோரிடத்தில் வாதவூரர் உண்மை சாதிப்பர்.

பேதம் இலாததோர் கற்பளித்த பெருந்துறைப்பெருவெள்ளமே என்பது சொல் திறம்பாத கற்பு எனப்படுவது கற்பித்தமையைக் காட்டியவாறு கற்புநெறியைக்கடைப்பிடித்து அன்புகாட்டிய வாதவூரருக்குக் குருமணி கொடுத்த கோதிலா நன்மைகள் கொஞ்சம் அல்ல. "அன்பு நெறிப்பட்ட அடியேன் ஆனந்தமாய்க் கசிந்து உருகுமாறு யான் பெறுதற்கரிய பேரின்பத் திருவருளைத் தந்தாய்.

"தென்னாடுடைய சிவபிரான் யான் காண ஒண்ணாதவை எல்லாவற்றையும் காட்டினான். செம்பொருளாகிய சிவத்தைக் காட்டினான். தனது திருவடித் தாமரைகளையும் காட்டினான். அருள்தேனைக் காட்டினான் நாட்டார் நகைக்க வைத்தான். நாம் மேலான வீட்டினை எய்துவித்தான்.

"என் செல்வமே! எனது உடம்பை உருக்கினாய். உருகும் தோறும் உள்ளத்தே ஒளி பெருகுமாறு செய்தாய். அழிவில்லாத இன்பத்தேனைப் பொழிந்தாய் - என்னைப் பயிற்றப் புறம் புறம் திரிந்தவர் சிவபெருமான்.

இவ்வாறு இன்பரசத் தேன் பருகிக் கற்புநெறி ஒழுகிய வாதவூரர் மாசிலாத மணிக்குன்று மறையும் போது படும் பாடு சொல்லொணாது. அது பெரும்பாடு. ஆராலும் ஆற்றொணாதது வாய்விட்டுச் சொல்லுவார்;

" அயனும் மாலும் இந்திரனும் ஏனைய தேவர்களும் சங்கற்பித்துப் பேராதரிக்கும் பெம்மானை, சொல்லும் பொருளும் கடந்த சோதியை நெல்லிக்கனியை, தேனை, பாலை, இனிய அமுதை, அமுதின் சுவையைச் சார்ந்து தழுவப் பெறுவது எந்நாளோ!

" உமை பங்கா! திங்கள் தங்கிய சடையாய்! சிவபுரத்து அரசே! திருப்பெருந்துறை உறை சிவனே! நின்னருள் பெற்றுக் கொள்ளப் பிறரை வணங்குவேனோ? துதிப்பேனோ? அவரை எனக்கு ஒருதுணை என நினைப்பேனோ? நின் திருவருளை நீயாகத்தர யான் பெறேனாயின் வாழுமாறு இல்லேன்.

" அரசே! பொன்னம்பலத்து ஆடும் அமுதே! நின்னுடைய திருவருளை எதிர்நோக்கி, நறிய உணவினை நாடி நிற்கும் நாரையானேன். இரவு பகலாக விழைந்து பயன் பெறாது வருந்துகின்றேன்.

" அன்று என்னை ஆற்றுதற்கரிய கற்பு முறைகளைக் கற்பித்து ஆண்டாய்! இன்று நீ கைவிட்டால் உரித்து இல்லாதவர் மாடுபோல் ஆவேனோ?"

" அன்று என்னை அடிமை கொண்டபோது என் உடல் பொருள் ஆவி அத்தனையையும் உன்னுடையனவாகக் கொண்டாய் அல்லவோ - இன்று என்னை உடலோடு துன்புறுத்துவாய். திருவடிக்கீழ் இன்புறுத்துவாய் நான் அடிமை - அதிகாரி நீ அல்லவோ ....

" என்னுள்ளத்தில் எழுகின்ற மேலான ஒளிவடிவினனே! இன்பத்திற்குரிய பதங்களை எல்லாம் கடந்து நின்ற இன்பவடிவினனே! என்னுடைய அன்பிற்கு உயிராக இருப்பவனே! புகழினையுடைய சிவபுரத்தரசே! அடியேனுடைய உயிரோடு உடம்பும் உணர்வும் இன்பமயமாய்க் கசிந்து உருகுமாறு இனிய திருவருளை எனக்குத் தந்தாய்!

" நிறைவுடைப் பொருளே! நீக்குதற்கரிய கோது என்பதே இல்லாத கோமளக் கொழுந்தே; ஒளிமலைப்பிழம்பே! என்உடலை நீ வாழ் குடிலாகக் கொண்டாய். இங்கும் அங்கும் எங்கும் பிறிது ஒரு பொருள் இல்லாத நின் இயல்பினை நினைப்பு அற்று நினைந்தேன். நீ ஒரு பொருள் அல்லை ஆனாய். நின்னை அன்றி ஒரு பொருள் அல்லையும் ஆனாய்.

கொடுத்துக் கெட்டவர் எவருமில்லை.

இவ்வாறு வாதவூரர் வடிவுடை மழு ஏந்தும் பொடியணித் திருமேனியரை நினைந்து நைந்து உருகிப் பிரிவுத்துயராற் பெறும் வேதனை பெரிது பெரிது. மனவாசகங் கடந்தோனை மணிவாசகங்களாற் பாடும் பண் சுமந்த பாடல்கள் படிப்போரைப் பரவசப்படுத்துவன. பத்தியில் ஆழ்த்துவன.

பராபரப்பொருள் பத்தரின் படுதுயர்பார்த்தது தாயேயாகிப் பரிந்துவந்து பரிதவிப்பு நீக்கியது பரமானந்தம் அருளியது.

வாதவூரர் வழித்துணை மருந்தினிடம் வைத்த இறை அன்பினாற் பெற்ற இறை இன்பத்தையும் வாயூறி வாழ்த்துவார்;

"சொல்லால் உணர்தற்கரிய அமுதத்தை என் மயிர்க்கால் தோறும் நிறையச் செய்தனன்.

"கொடியேனுடைய ஊன் பொருந்திய உடம்புகள்தோறும் உள்ளத்தைக் கோயிலாகக் குடிகொண்டனன். இனிய தேனைப் பாய்ச்சினன். நிரம்பிய ஆச்சரியகரமான அமுத ஒழுக்குகளை என்புத் துளைகள் தோறும் ஏற்றினன்.

"இடையறாது உருகும் உள்ளத்தைக்கொண்டு ஓர் உடலைச் செய்தது போல எனக்கு அன்பு கசிந்து ஊறும் உடலைத் தந்தனன். நான்முகன் நாரணன் நாடொரை நற்பொருள்

"விளக்கம் பொருந்திய கரும்பின் இனிமையை மீண்டும் நுகர்தற்கு அவாவியிருக்கும் களிறு போல் என்னை இவ்வுலகத்தில் இருக்கச் செய்தனன்.

மெய்யன்பர்களால் அன்றி அறிய ஒண்ணாதவர் சிவபெருமான். அவர் எங்குமாகி எல்லாமாகவும் அல்லவுமாகவும் இருப்பார். பாடுபவர்களுக்கு இரங்குவார். பிறவிப் பிணியை நீக்கும் மருந்துமாவார். தாமாக எழுந்தருளிவந்து வாதவூரருக்குப் பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்தவர். கற்புநெறி காட்டி அன்பினை வளர்த்தவர். பல்லோரும்காண வாதவூரருக்கு முத்திப்பேற்றை முன்னின்று அருளினர். ஒருவர் அந்நெறி அறிந்து ஒழுகின் செந்நெறி நின்று சிவப்பேறு பெறலாம். இவ்வாறான பேருண்மைகளைப் பெறலாம் என்ற தத்துவத்தை நமக்கு உணர்த்துவது திருவாசகச் செம்பொருள்.

முற்றும்

★ தூய மனம் உள்ளவர்கள் எல்லாவற்றையும் தூய்மையாகவே பார்க்கிறார்கள். ★

பொறுமைக்குச் சமமான பண்பு வேறில்லை.

உ

திருப்பரங்குன்றுறை

# தெய்வானை மணாளன்

›› சந்நிதி தாசர் ‹‹

"கையோ அயிலோ கழலோ முழுதுஞ் செய்யோய்" என அருணகிரிநாதசுவாமிகள் போற்றும் செவ்வா னுருவிற் றிகழ் வேலவன், ஞானாகரன், வேதாகம ஞான விநோதன், திருப்பரங் குன்றுறை தெய்வானை மணாளன்,

"உலகம் உவப்ப வலன் ஏர்புதிரிதரு
பலர் புகழ்ஞாயிறு கடற்கண்டா அங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி"

அன்ன ஒப்பற்ற மெய்ஞ் ஞானப்பிரகாசம் சுடரும் பேரருட் சோதி வடிவினன். "ஓம் சிவசூர்யாய நம." எனச் சைவப் பேருலகம் போற்றித் துதிக்கும் செங்கதிரவனின் ஒளிப்பிரகாசம் உலகெங்கும் பரவி உயிர்கள் அனைத்திற்கும் மகிழ்வூட்டி வாழ் வளிக்கின்றது. நக்கீர தேவநாய னார் ஏத்தித் தொழும் அருள் வள்ளலாம் முருகப்பெருமானின் பேரருள் ஆன்மகோடிகளின் நெஞ்சக்கோயில்களில் இடையீடு இல்லாமற் சுடர்விட்டுப் பிரகா சித்து, அப்பெருமானின் பாதார விந்தங்களை மெய்யன்போடு பற் றிக் கொண்டவர்களைக் காப் பாற்றி அவர்களுக்கு உய்யும் வழியைக் காட்டுகின்றது. நெஞ் சில் ஒருகால் நினைக்கின் அடி யாரை எப்போதும் காத்தருளும்



முருகப்பெருமானின் சரணம் புயத்தை நக்கீரமுனிவர்,

"உறுநர்த் தாங்கிய மத னுடை நோன்றாள்" எனத் திருமுருகாற்றுப்படையில் நெஞ் சுருகிப் போற்றுகின்றார். பகை

அன்புநிறைந்த இன்சொல் இரும்புக்கதவைக்கூடத்திறக்கும்.

வர்களை முற்றாக அழிக்கும் இடி போன்ற பராக்கிரமம் வாய்ந்த முருகப்பெருமானின் கராம்புயத்தை,

''செறுநர்த் தேய்த்த செல் லுறழ் தடக்கை'' எனச் சீர்பூத்த செந்தமிழ்ப்புலவர் நக்கீரனார் ஏத்தித் தொழுகின்றார்.

திருப்பரங்குன்றுறை முருகப் பெருமான் குற்றமற்ற கற்புடைய தெய்வானை மணாளன் என்ப தனை உணர்த்தும் தெய்வப்புல வர் நக்கீரனாரின் அருள்வாக்கு,

'' மறுஇல் கற்பின் வாள் நுதல் கணவன்.'' அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத,ஒளிரும் மணி புனைந்த அணிக்குப் பேரழகூட் டும், மின் ஆயிரம் ஒரு மெய் வடிவாக விளங்கும், சீர் வளர் தெய்வ எழிற் செல்வன் திருப் பரங் குன்றுறை தெய்வானை மணாளன் அகத்திய மாமுனிக்கு அருந்தமிழ் உரைத்த சிவஞான அருட் குரு மாமணியாம் முருகப் பெருமானின் திருமார்பிற் செங் கடம்ப மலர்மாலை பொலியும் வியத்தகு வனப்பை:

''இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து
உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்''

எனத் தெவிட்டா இன்பத் தீந் தமிழில் நக்கீரர் நன் முரு காற்றுப் படையிற் செப்புகின் றார். பேரருள் பொழியும் மெய்ஞ்ஞான தேஜோமய சிகர மாய்ப் பிரகாசிக்கும், எழில் எலாம் மலரும் காந்தட் பெருந் தண் கண்ணி அணிந்த, திவ்ய சிரசினையுடைய திருப்பரங்குன் றுறை தெய்வானை மணாளனை

'' சுரும்பும் மூசாச் சுடர்ப் பூங்காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்''

எனப்போற்றி, அணி முரு காற்றுப்படையைப் பூசையாய்க் கொண்டு முருகப் பெருமானை இறைஞ்சுதலே, சைவத் தமிழ் நல்லுலகம் என்றும் தாழ்ந்து பணிந்து ஆற்றவேண்டிய தலை யாய தெய்வப்பணி எனக் கழி பெருங் காதல் மீதூர நக்கீர தேவநாயனார் நன்கு உணர்த்து இன்றார்'தலையே நீ வணங்காய் எனத் தொடங்கும் திருவங்க மாலையில் மெய்யடியார்கள் தமது தலை, கண், செவி, மூக்கு, வாய், நெஞ்சு, கை, கால் ஆகிய அங்கங்களால், ஆக்கையால் ஆழ்ந்த பக்தி உணர்வோடு சிவ பெருமானாம் தலைவனை வணங் குதலே பிறவி எடுத்த பயனைப் பெற்றுய்வதற்குரிய விழுமிய சைவ வழி எனத் திருநாவுக்கரசு நாயனார் நல்வழி காட்டு கின்றார்.

மக்களின் ஆசை எப்போதும் குறைவதில்லை.

"கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென்று ஏத்திப் பலருடன்"

தேவமகளிர் மலைப்பக்கங்கள் எதிர்ஒலி செய்யும் வண்ணம் "நாதா குமரா நம" என்று அரனார் வணங்கிய முருகப்பெருமானை நெஞ்சுருகி ஏத்தித் தொழுது திருப்பரங்குன்றச் சோலையில் ஆடிப்பாடி ஆனந்த பரவசராய் எல்லாம் அறத் தம்மை இழந்த நலத்தின் நிறைவில், பழுத்த முருக அநுபூதியில் திளைக்கின்றனர். திருப்பரங்குன்றுறை தீரன் போர் செய்து வென்ற வெற்றிக்களத்தைப் பாடிப் பேய்மகள் துணங்கைக் கூத்து ஆடுதல், பேய்களும் வணங்கும் தீரன் திருமுருகன் எனும் உண்மையைப் பறை சாற்றுகின்றது. ஒப்புநோக்கிக்

"கூதா எகிரா தகுலிக் கிறைவா
வேதா ளகணம் புகழ்வே லவனே"

எனும் அருணகிரிநாதசுவாமிகளின் கந்தரநுபூதி அருள்வாக்கு திரிகரணசுத்தியுடன் நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருகி ஓதற்பாலது. முருகப்பெருமானின் சுடர் இலை நெடுவேலின் பராக்கிரமத்தைப்

"பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்குச்
சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்"

என வாழ்த்தி, நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் என்றும் முருகனின் வேலை வணங்குதலே செம்மனச்செல்வரின் சீரிய வேலை என உணர்த்திச் செழித்துத் தழைக்கும் முருக பக்தி பழுத்துப் பயன் சுரக்கும் மெய்ஞ்ஞானப் பேரின்பப்பெருவாழ்வை அருளும் ஆறுமுகப் பெருமானின் ஆறுபடை வீடுகளுக்கும் அடியாரை ஆற்றுப் படுத்துகின்றார் திருநெறிய தமிழ்வல்ல நக்கீரனார். "கந்தா குகனே கதிர்வே லவனே" எனக் கந்தசஷ்டி கவசம் போற்றும் செவ்வேளின் திருக்கைவேல்விண்ணோர்சிறைமீட்ட தீரவேல், வீரவேல். "வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும்" என்பது நக்கீரர் ஞானவாக்கு. "பயந்ததனி வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே" எனக் கந்தரலங்காரத்தில் வேலையும் மயிலையும் துதிக்கின்றார் அருணகிரிநாதசுவாமிகள்.

ஆறுமுகப்பெருமானின் செம்மையான திருவடித்தாமரைகளைச் சென்றடையும் பெருமை

புலன்களை அடக்கி ஆள்வதே நன்று.

வாய்ந்த உள்ளம் '' சேவடி படரும் செம்மல் உள்ளம் '' என நக்கீரமுனிவரால் விதந்தோதப் பெறுதல் மெய்ஞ்ஞானியர்க்கு என்றும் பேரானந்த அமிழ்த விருந்தாய்த் தெவிட்டாது தித்திக்கும் பான்மையது. கந்தர் அநுபூதியில் ஆழ்ந்து திளைக்கும் மெய்ஞ்ஞானியர் அப்பெருமானின் சேவடி படரும் செம்மல் உள்ளம் செழிக்கும் தவசீலர். திருப்பரங்குன்றுறை தீரனின் பேரருளால் அவர்கள் தமது இனிய விருப்பம் நிறைவேறப் பெறுவர் அந்நிலை அவன் அருளாலே அவன்தாள் சேரும் பேரின்ப நிலையாகும், இச் சைவ சித்தாந்த உண்மையைச் சங்கத் தமிழின் தனிப்பெருந் தலைவராம் நல்லிசைப்புலவர் நக்கீரனார் நேச அருள் நிறைந்த நெஞ்சங்களில் முருகபக்தி எழுச்சி பெற்றுத் தழைத்தோங்கும் வண்ணம் பின்வருமாறு இயம்புகின்றார்.

எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே.

திருமகள் சிறப்புடன் எழுந்தருளியிருக்கும் மாடங்கள் மலிந்த போர் அருமையாகப்போன வாயிலையுடைய மதுரைக்கு மேற்கே கைபுனைந்தியற்றாக் கவின் பெறுவனப்பெலாம் பொலியும் திருப்பரங்குன்றத்தில் அமிழ்திற் குழைத்த அழகனாம் தெய்வானை மணாளன் இனிதமர்ந்து பேரருள் பொழியும் கண் களிக்கும் எழிற் செழுமை நலமெலாம் திரண்ட அதியற்புதத் தெய்வத் திருக்காட்சியை மெய்யடியார்கள் என்றும் போற்றித் தொழுது உய்யும் வண்ணம், நந்தாத் தேனைப் பழச்சுவையாய ஞானக்கரும்பின் தெளிவன்ன செஞ்சொல் புனை இசையாய்த், தேவகானமாய், இழுமென இழிதரும் தெய்வத்தமிழ் அருவியாய்ப் பின்வருமாறு பொழிகின்றார் நக்கீரதேவநாயனார்.

இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந்து உறைதலும் உரியன்; அதாஅன்று.

தூய்மையானவனே கடவுளை மிகவும் நெருங்குகிறான்.

[தொடர்ச்சி.....

உ

# முருக மூர்த்தம் பற்றிய பல்வேறு வரலாறுகள்

( கே. எஸ். ஆனந்தன் )

எப்பேர்ப்பட்ட ஓர் ஆத்ம ஞானி பிரம்ம புத்திரனாக அடைந்திருக்கின்றார் என்று மகிழ்ச்சியடைந்த சர்வேஸ்வரன் அவரை மீண்டும் பரீட்சிக்க விரும்பி 'குழந்தாய்! உனது ஞானத்தை மிகவும் மெச்சுகின்றேன். உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள் தருகின்றேன்' என்றார்.

சனத்குமாரர் சிரித்தார். ''பரமேஸ்வரா! என்னுடன் விளையாடுகின்றாயா? தங்கள் வரத்தைத் தாங்களே வைத்துக் கொள்ளுங்கள். பிரம்மத்தில் உயர்ந்தது - தாழ்ந்தது என்று இருக்க நியதி உண்டா? எனக்கு எதையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அற்ப ஆசை எதுவுமே இல்லாத போது தங்கள் வரத்தினால் ஆகவேண்டியது எதுவும் இல்லை. நிறைவாக இருக்கும் எனக்கு வரம் எதற்கு? தாங்கள்தான் வரம், சாபம் இவற்றில் ஏதோ அர்த்தம் இருப்பதாக நினைக்கிறீர்கள் போலத் தெரிகின்றது. அப்படியானால், உனக்கு ஏதாவது வரம் வேண்டுமானாற் கேள் தருகின்றேன்'' என்று சர்வ சாதாரணமாகக் கூறினார்.

சர்வலோக நாயகனான பரமேஸ்வரன் அவர் கூறியதைக் கேட்டுப் பெருமகிழ்வுற்றார். சனத்குமாரரின் கனவு பலிதமாக வேண்டும் தேவர்கள் இடர் நீங்க வேண்டும். அதற்கு ஒரே வழி அவரிடம் வரம் பெறல் வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டு சர்வலோக நாயகன் தன்னைத் தானே சிறியவராக்கிக் கொண்டு ''அப்பா! இப்பேர்ப்பட்ட மகா ஞானியான உன்னை மகனாக அடைந்த பிரம்மா பாக்கியவானே. பிரம்மா பெற்ற பாக்கியம் எனக்கும் கிடைக்க வரம் தர வேண்டும் இன்னொரு பிறப்பில் நீ எனக்கு மகனாகப் பிறக்க வேண்டும்'' என்றார்.

'ஆகா - உனக்குப் பிள்ளையாக அவதரிக்கின்றேன்'' என ஒப்புதல் அளித்து வரம் தந்தார் சனற்குமாரர்.

ஆக்கவும் அருந்தவும் உதவுவதே மழைநீர்

ஞானம் வருகிற வரையில் தான் ஒருவருக்கு பிறவி வேண்டாம். பிறவி என்பது பெருங்கடல் என்று இறைவனை வேண்டுவர். ஞானம் எனும் தோணியில் அமர்ந்ததும் பிறவி என்பது சிறு நீர்க்குமிழி ஆகிவிடும். வேண்டும் வேண்டாமை என்பது இல்லாமற் போய்விடும். துன்பமே இல்லாத ஆனந்த சாகரம்தான். சனத்குமாரர் சொல்வது எல்லாம் சத்தியமாகிவிடும் அல்லவா? 'உனக்குப் பிள்ளையாக அவதரிக்கின்றேன்' என்றுதானே கூறினார் உங்களுக்கு என்று அம்பாளைச் சேர்க்கவில்லை. இதனையும் சிந்தித்துப் பரமேஸ்வரனைப்பார்த்துக் கூறினார். ''சர்வேஸ்வரா! கேட்காதவர்களுக்கு ஒன்றும் கொடுக்கக்கூடாது என்பது சாஸ்திரம். நீ உனக்கு என்று கேட்டதால் உனக்கு மட்டும் பிள்ளையாய்ப் பிறப்பேன். என்னை எப்படி உற்பவிக்க முடியுமோ அப்படி உற்பவித்துக்கொள்'' என்று பயமின்றிக் கூறிவிட்டார்.

சனத்குமாரர் கூறியதைக் கேட்ட அம்பாளுக்கு இது ஏமாற்றமாக இருந்தது. உலக சீவராசிகள் அனைத்தும் தன் குழந்தைகள் தாம் என்ற போதிலும் ஓர் பிரம்ம ஞானி தன் குழந்தையாக நேரிடையாக வரவேண்டும் என்று பார்வதிதேவி விரும்பிச் சனத்குமாரரை நோக்கிக் கணவன் மனைவி இருவரும்' உள்ளத்தால், உணர்வால் ஒருவரே என்ற சாஸ்திரத்தை மறந்து என்னை நீக்கிவிட்டு வரம் தருவது என்ன நியாயம்?'' என்று கேட்டாள்.

''அம்மா, நீசொல்வது நியாயமாயிருப்பினும் பரமேஸ்வரனுக்குப் பிள்ளையாய் வருவதே எனக்குத் திருப்தி தருகின்றது. எல்லாம் பிரம்மம் என்று எனக்குத் தெரிந்தாலும் ஒரு விடயத்தில் எனக்குப்பக்குவம்வரவில்லை ஆகவே என் வரத்தின் படியே உன் பதியிடத்தில் உற்பவிக்கத் தாங்கள் அனுமதிக்க வேண்டும் என்று விநயமாக வேண்டினார்.

ஆனாலும் அன்னைக்கு மனசு வரவில்லை. பின்னர் மன மொத்து ஓர் முடிவுடன் விடை பெற்று கொண்டனர்.

சர்வமும் அறிந்த அகில லோகநாயகனான பரமேஸ்வரன் காரணமின்றிக் காரியமாற்று வாரா? ஆதியில் பஸ்மாசுரன் என்பவனுக்கு இறைவன் ஓர் வரம் அளித்திருந்தார். அவன் யார் தலையில் கை வைக்கிறானோ அவர்கள் எரிந்து சாம்பலாகி விடுவது என்பதே அவ் வரம். வரமளித்த இறைவன் தலையிலேயே கைவைத்துப் பரீட்சிக்க அசுரன் நினைத்தான். அக்கணமே இறைவன் அந்தர்த்தானமாகி விட்டார். திடீர் எனப் பரமேஸ்வரன் மறைந்ததும் அம்பாள் அச்சத்தியின் வயப்பட்டவராய்ச் சாதாரண ஓர் பெண்ணாய் உருவெடுத்தாளாயினும் இறைவனின் பிரிவு தாங்

காது உருக ஆரம்பித்துவிட்டாள் யதார்த்தமாகவே அவள் சரீரம் உருகி ஓர் நீர் நிலையாக மாறி விட்டது. அதுதான் சரவணப் பொய்கை.

பஸ்மாசூரன் அழிந்து இறைவன் பிரத்தியட்சமானதும் அம்பிகையும் தன் திவ்விய ரூபத்துடன் வெளிவந்தாள். அதே சமயம் அந்நீர் நிலை தன் பிரேமைக்கு நினைவாக இருக்க அனுக்கிரகித்தாள். சரவணம் சாட்சாத் அம்பிகையின் சரீரம் தான் என்பது இறைவனுக்குத் தெரியாதா? அந்த இடத்திலேயே தன் திருவிளையாடலுக்குத்தளம் அமைக்கத்திருவுளம் கொண்டார்.

சனத்குமாரரின் அடுத்த பிறப்புத் தன் விழிகளில் அக்கினி தேசஸ்ஆகி ஜனித்து விடுவதென்றும், அம்பாளின் சரீரமான சரவணத்தில் தங்கி சுப்பிரமணிய ரூபமாக்கித்தருவது என்பதுமே அந்த முடிவாகவிருந்தது.

இதன்படியே ஈசுவரனின் நெற்றிக்கண்களிலிருந்து அக்கினிப் பிழம்பாக உற்பவித்தார் சனத்குமாரர். யாராலும் தாங்க முடியாத தேஜஸ் ஆக விளங்கிய அப்பொறிகளின் உக்கிரத்தை கங்கை தாங்கிக்கொண்டாளாயினும் முடியாமல் தவித்தாள். அதைப்பார்த்த பிரம்மா 'இதைக் கொண்டு சென்று சரவணத்திற் சேர்ப்பித்து விடு' என்று அவளிடம் கூறினார். அதற்குக் கங்கை "ஆளானப்பட்ட என்னாலேயே தாங்க முடியாத உக்கிரமான சுவாலையா இருக்கே சிறுபொய்கையான சரவணம் எப்படி தாங்கும்' என்று கேட்டாள். ' சரவணம் என்பது அன்னையின் புனித சரீரமாகும். அதனால் இதைத்தாங்க முடியும். ஈஸ்வர இரகசியமும் அதுவேயாகும். அங்கே இதனைச் சேர்ப்பித்துவிடு என்று கூறினார். கங்கையும் அப்படியே சேர்ப்பித்து விட்டு நிம்மதியடைந்தாள்.

சரவணப்பொய்கையில் உலகமுய்யும் பொருட்டு முருகன் அவதரித்தான். அவருடைய தோற்றம் - சனத்குமாரனின் கனவு நனவாகியது. அம்பிகையின் மகிமையால் அதாவது சரவணமானதால் சரவணன் என்றும், கார்த்திகேயன் என்றும், மகாசேனன் என்றும் பெயர்பூண்டு தகப்பனுக்கே உபதேசம் செய்யும் குருமூர்த்தியானார். இவரையே ஸ்கந்தர் என்றும் ஞானபண்டிதர் என்றும் சாந்தோக்கிய உபநிடதத்திலும் கூறப்பட்டிருக்கின்றது.

பிரம்மபுத்திரனாக இருந்த சனத்குமாரரிடம் வரம் பெற்ற அகிலாண்டேஸ்வரன் அவர் தன் குமாரனாக மறு அவதாரம் செய்த போது அவரையே குருவாக ஏற்றுப் பிரணவத்தின் பொருள் கேட்டு உபதேசம் பெற்றமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். சர்வவித்தகரான நாரத

மகரிஷி கூட சனத்குமாரரிடம் ஞான உபதேசம் பெற்றார் என்றும் ஆத்மஞானம் பெறவிழைந்தார் என்றும் அறியக்கிடக்கின்றது.

இருள்கடந்த ஒளி, ஞானக்கினி முருகன் என்று 'சாந்தோக்யம்' வலியுறுத்திக் கூறுகின்றது.

இறைவன் உன் உள்ளத்தில் எழுந்தருள வேண்டுமானால் உன் உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும். குப்பை நிறைந்த இடத்தில் நீ இருக்க அருவருப்புக் கொள்வாயன்றோ?

அதுபோல் காமம், கோபம், வஞ்சனை, சூது, புலை, கொலை, பொய் முதலிய அசுத்தங்கள் நிறைந்த உள்ளத்தில் இறைவன் இருக்கமாட்டான். ஆனபடியால், சாந்தமாகிய பசுவின் சாணத்தால் மெழுகி, அன்பு என்ற சந்தனந் தெளித்து, அறிவு என்ற விளக்கேற்றி, உண்மை என்ற தூபம் கமழவை. இறைவன் அந்த உள்ளத்தில் எழுந்தருளுவான்.



அண்மையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளின் 13-வது ஆண்டுக் குருபூசை நிகழ்வில் வாகீசகலாநிதி க. நாகேஸ்வரன் தலைமையுரை நிகழ்த்துவதையும் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட உயர்கல்வி அமைச்சு மேலதிக செயலாளர் தில்லைநடராசாவையும், சபையின் ஒரு பகுதியினர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

பிறருக்கு நீ உதவியதை நினைக்காதே

## மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

# சபதம்

() சிவத்திரு வ. குமாரசாமிஐயர் ()

திரௌபதி தனது கணவர்களை நோக்கிப் பரிதவித்து விளிப்பதைக்கண்ட சபையினர் கலக்கமும் துயரமும் அடைந்தனர். ஆனால் துச்சாதனனோ திரௌபதியை இழிந்த சொற்களால் ஏசி அவமதிக்கலானான். கோபமடைந்தவளாய்த் திரௌபதி சபையினரை நோக்கி "பெரியோர்களே! தருமர் தர்மத்தின் நுட்பங்கள் தெரிந்தவராய் இருந்தும் சூதில் தன்னைத் தோற்ற பின் என்னைத் தோற்றாரா? அல்லது என்னைத் தோற்றபின் தன்னைத் தோற்றாரா? சுதந்திரம் இழந்த ஒருவர் எப்படி மனைவியை வைத்து ஆடமுடியும்? உண்மையை உரைக்கஅஞ்சி இருப்பவர்கள் சான்றோர்கள் அல்லவே! எனவே, தயவுசெய்து உண்மையை நடுவு நிலைமை தவறாது எடுத்துக் கூறுங்கள்" என்று வேண்டினாள்.

திரௌபதியின் கேள்விக்குப் பீஷ்மர் பதில் உரைக்க முயன்றார். "பாக்கியவதியே, அறம் நுட்பமானது. யுதிஷ்டிரன் தான் ஜெயிக்கப்பட்டதை ஒப்புக்கொண்டுள்ளான். உன்னைத் தோற்றது நியாயமானதா என்று கூறமுடியாமல் உள்ளது" என்று விடைபகர்ந்தார்.

இவ்வுரைகளைச் செவிமடுத்த பீமன் கோபமடைந்தவனாய்ச் சத்தமிடத் தொடங்கினான். அர்ச்சுனன் அவனது கோபத்தை அடக்கி அமைதியாக இருப்பதே இச்சந்தர்ப்பத்தில் நல்லது என்று கூறிப்பீமனை அடக்கினான், இவ்விதமான அவலச் சூழ்நிலையில் தர்மத்தை நிலைநாட்ட ஒருவன் சபையில் எழுந்து நின்றான். துரியோதனனின் சோதரனாகிய விகர்ணன் எழுந்து "பெரியவர்களே! வேட்டையாடுதல், சூதாட்டம், சிற

றின்பம் அநுபவித்தல் என்பன மன்னர்கட்குப் பெரும் கேட்டையே விளைவிக்கும் என்பதனை அறிந்திருந்தும், யுதிஷ்டிரனை வஞ்சகமாகச் சூதாட்டத்துக்கு அழைத்ததுமன்றித் திரௌபதியைப் பணயமாக வைத்து ஆடும்படி தூண்டியவன் சகுனி. சகுனியின் வஞ்சனையால் யுதிஷ்டிரன் எல்லாவற்றையும் இழந்து நிற்கிறான். இது நியாயமா? இது வஞ்சகமாக ஆடப்பட்ட ஆட்டம். இதனை ஏற்பதும் பெரும் தர்மக்கேடு எனக்குத் தோன்றியதைக் கூறுகிறேன். இனிப் பெரியோர்களாகிய நீங்கள் செய்ய வேண்டியதைத் தீர்மானியுங்கள்'' என்று மொழிந்தான்.

விகர்ணனின் தர்மஉரைகள் கன்னனுக்குக் கோபத்தை விளைவித்து! ''அடே விகர்ணா! சிறுவனாகிய நீயா தர்மத்தைப்பற்றிக் கூறுகிறாய். சபையில் இருக்கும் பெரியோர்கள் அனைவரும் மௌனமாக இருப்பது உனக்குப் புரியவில்லையா? துச்சாதனனே! சூதாட்டத்தில் தோற்ற இவர்களுக்கு ஏன் மேலாடைகள்? அவற்றைக் களைந்து வா!'' என்று கட்டளையிட்டான். இவ்வுரைகளைக் கேட்ட பாண்டவர்கள் தங்கள்மேலாடைகளைத் தாமே களைந்தெறிந்தனர். பாவம்! பெண்ணாகிய திரௌபதி என்ன செய்வாள்? மௌனமாக நடப்பதைப் பார்த்துத் துயருற்றவளாய்த்தலை குனிந்து நின்றிருந்தாள்.

இவ்வேளையில்த் துச்சாதனன் அவளது ஆடைகளைப் பற்றிக் களைய முற்பட்டான். சூழ்நிலையின் விபரீதத்தை உணர்ந்த திரௌபதி தனது ஆடைகளை இரு கைகளாலும் பற்றிக்கொண்டு கண்ணபிரானை வணங்கித் தியானித்தாள். பற்பலவாறு கூவிக் கண்ணபிரானை மென்மேலும் தியானித்தவேளை துச்சாதனன் களையக் களைய அவளது ஆடைகள் மென்மேலும் பெருகத் தொடங்கின. ஆடைகளைக் களைந்து நின்ற துச்சாதனன் கைசோர்ந்து களைத்தான் இதனைக் கண்ட சபையினர் மகிழ்வுற்றவராய்த் திரௌபதியைப் புகழ்ந்துபேசலாயினர்.

இவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டு சபையில் வீற்றிருந்த பாண்டவர்கள் மனம் குமுறிக் கொந்தளித்தனர். பீமன் மிகவும் ஆவேசமுற்றவனாகச் சபையினரை நோக்கிப் ''பெரியோர்களே! இப்பாவியான துச்சாதனனின் மார்பைப் பிளந்து உதிரத்தைக் குடித்துக் கொல்வது உறுதி இது சத்தியம்'' என்று சபதமொன்றை மொழிந்தான். பீமனின் உரைகளில் உள்ள கடுமையை நினைத்த சபையினர் நடுங்கினர் இவ்வேளையில் விதுரர் ''சபையினரே! திரௌபதி அநாதரவாக நின்று கேள்விகேட்கும் போது மௌனமாக இருக்

கிறீர்கள். இது தர்மமன்று உண்மையை உரைக்க அஞ்சி மௌனமாக இருப்பதும், பொய் சொல்வதனால் ஏற்படும் பலனில் பாதிப்பலனை அநுபவிக்க வேண்டும். இது தகுமா? எனவே பதில் கூறுங்கள்'' என்று கூறலானார்.

சபையினர் எந்த மறுமொழியும் உரைக்க முற்படவில்லை, மௌனமாக வீற்றிருந்தனர். இவ் வேளையில் துரியோதனனும் கன்னனும் திரௌபதியை இகழ்ந்து பேசி அவமரியாதை செய்தனர். அத்துடன் துரியோதனன் தனது தொடைகளைக் காட்டி அதில் வந்து அமரும்படி திரௌபதியை அழைத்தான். இத் தீச்செயலைக் கண்ணுற்ற பீமன் ஆவேசமுற்றவனாய் ''ஏ, துரியோதனா! உனது தொடையைக் கதையினாற் பிளந்து உன் உயிரை மாய்ப்பேன். இது உறுதி! இல்லையேல் எனக்கு வீரசுவர்க்கம் கிட்டாது போகட்டும் இது சத்தியம்'' என்று சூளுரைத்தான் மேலும் 'சபையோர்களே! கேளுங்கள். இந்தக் கொடியவனான துரியோதனனை நான் கொல்வது நிச்சயம். அர்ச்சுனன் கன்னனைக் கொல்வான். சகாதேவன் சகுனியைக்கொன்று பழி முடிப்பான். துரியோதனனைக் கொன்று அவனது தலையை எனது கால்களால் துகைப்பேன். துச்சாதனனின்மார்பைப்பிளந்து அவனையும் கொன்று முடித்தால் தான் எனது கோபம் தணியும்'' என்று தனது கடும் சபதத்தைக் கூறி முடித்தான். அப்போது திரௌபதி ''ஏ துரியோதனா! தொடைகளைத் தட்டி நீ ஆணவத்துடன் எங்களை அவமதிக்கிறாய். பீமசேனர் உரைத்த சபதங்கள் யாவும் நடந்தே தீரும் துச்சாதனனின் உதிரத்தைப் பூசியே கூந்தலைமுடிப்பேன் இது உறுதி என்று கூறி அமைதியானாள். அப்பொழுது துர்நிமித்தங்கள் தோன்றின. இதனால்த் திருதராஷ்டிர மன்னன் பெரும் குழப்பமடைந்தான். காந்தாரி மிக்க துயரடைந்தாள்.

துர்நிமித்தங்கள் தோன்றியதை அறிந்து கொண்ட திருதராஷ்டிர மன்னன், பாண்டவர்களால்த் தனது புதல்வர்கட்குக் கெடுதல்கள் ஏதும் நேராமல் இருக்கவேண்டும் என்று பயந்தவனாய்ப் பாண்டவர்களின் சினத்தைத் தவிர்க்க முயன்று பாஞ்சாலியை நோக்கிப் ''பெண்ணே! கற்பின் அணிகலனே மருமக்கள் யாவரிலும் சிறந்தவளே! வரம் ஏதும் வேண்டுமாயின் என்னிடம் நீ கேட்டுப் பெறலாம்'' என்று கூறலானான் அவ்வுரைகளைச் செவிமடுத்த திரௌபதி ''மன்னர் பெருமானே! தருமசீலரான யுதிஷ்டிரர் அடிமைத்தனத்தில் இருந்து மீட்சி பெற வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டாள். ''அப்படியே ஆகுக'' என்றுவரமளித்த திருதராஷ்டிர மன்னன் ''பெண்ணே! இன்னுமொரு வரம் நீ கேள் தருவதற்குச் சித்தமாக உள்ளேன்'' என்றுகூறலானான்.

தன்னை மதிப்பவன் பிறரையும் மதிப்பான்.

அவ்வேளை திரௌபதி, பாண்டவர்களில் மற்றைய நால்வரும் விடுதலை அடைய வேண்டும் என்று வேண்டினாள். திருதராஷ்டிரனும் அதற்கு ஒப்புதல் நல்கி மூன்றாவது வரத்தையும் கேட்குமாறு பணித்தான். அப்போது திரௌபதி ''மன்னர்பெருமானே அதிக ஆசை அறத்தைக் கெடுத்துவிடும். எனது கணவர்மார்கள், விடுதலை பெற்றுவிட்டனர். இனி அவர்கள் தமது நற்செய்கைகளினால் மேன்மை பெற்றுவிடுவார்கள். ஆகவே மூன்றாவதுவரத்தை நான் கேட்கவில்லை'' என்றுகூறி முடித்தாள்.

அப்பொழுது கன்னன் ''பெண்ணின் வரத்தாற் பாண்டவர்கள் விடுதலை பெற்றுவிட்டனர்'' என்று பரிகசித்தான். கன்னனின் அவமதிப்பான சொற்களால் ஆத்திரமுற்ற பீமன் கன்னனை நோக்கி தாக்க ஆயத்தமானான். அப்பொழுது யுதிஷ்டிரர் அவனை அமைதிப்படுத்தி திருதராஷ்டிரரை நோக்கி ''யாது செய்யவேண்டும் நாம்'' என வினாவினார். அப்போது திருதராஷ்டிரன் ''தருமம் தவறாது நடந்த உத்தமனே! நீ மிகவும் மேன்மையான குணங்கள் உடையவன். உனக்கு ஒருபோதும் எந்தக் குறையும் ஏற்படாது. சகோதரர்களான துரியோதனனது செய்கைகளை மனத்திற் கொள்ளாது, நீ உனது தம்பியருடனும் உனது செல்வங்களுடனும் இந்திரப் பிரஸ்தத்திற்குச் சென்று சிறப்புடன் உனது ஆட்சியை நடாத்துவாயாக! மகிழ்வுடன் சென்றுவருவாயாக!'' என்று விடைகொடுத்தான்.

இத்தொடரில் நாம் அரிய தத்துவங்களை எம் உளம்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. முதலாவதாகச் சான்றோர் பலர் நிறைந்த சபையில் திரௌபதியின் கேள்விகட்கு எவரும் பதிலிறுக்காது அமர்ந்திருந்தவேளையில், விகர்ணன் எழுந்து நீதிக்காகக் குரல் கொடுக்கிறான். இதனை நாம் உற்று நோக்கும் போது தர்மம் என்பதனை எச்சந்தர்ப்பத்திலும் எடுத்துரைக்கத் தவறக்கூடாது என்பது புலனாகிறது. அத்துடன் நியாயம் என்று உணர்வதை எடுத்துரைக்கும் மனோதைரியம் இருக்கவேண்டும் அதனை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பது புலனாகிறது. இன்றைய சூழ்நிலையில் அநீதிகட்கு அஞ்சி ஒதுங்கி மௌனமாக வாழ்வது என்பதே வழக்கமாகிவிட்டது. இன்றைய காலகட்டத்தில் எம்மெல்லோருக்கும் இம்மனோபாவம் இருப்பது மிகவும் முக்கியமானது ''அஞ்சி அஞ்சி வாழ்வாரடி கிளியே'' என்று பாரதியார் பாடியது போன்று எமக்கு இன்றுள்ள சூழ்நிலையில் எதற்கும் அச்சம், நீதி கேட்க அச்சம். உண்மையை உரைக்க அச்சம். சுவாமி விவேகானந்தர் போன்று வீரத்துடன் கூடிய ஆத்மீக உணர்வே இன்று வேண்டப்படுகிறது.

உற்ற சமயத்தில் உதவுவதே உண்மை உறவு.

அடுத்துத் திரௌபதியின் கற்புநெறியின் நிலைமையை உணரும் சந்தர்ப்பம். இவரின் மனைவி அன்று இழிவாகத் துரியோதனனால் இகழப்பட்டவள். கண்ணபிரானின் திருவருள் கைகூடியதும், அவளின் உத்தம நிலை சபையில் பட்டவர்த்தனமாக வெளிப்பட்டது. விதிவசத்தால் அவள் ஐவரின் மனைவியாக வாழ்ந்தாலும் அவள் கற்பினின்று தவறாத உத்தமி என எல்லோரும் உணர்ந்து கொண்டனர். தெய்வத்திருவருள் என்பது எவ்வாறு வினையை மாற்றவல்லது என்பதனையும் இதனால் உணரவேண்டும். திரௌபதி கண்ணபிரான்மீது வைத்த அளவற்ற பக்திநிலையை நாம் நன்றாக உளம்கொள வேண்டும்.

[ தொடரும்......

---

## வா முருகா அருள் தா முருகா

ஆற்றங்கரை ஓரத்தினிலே வீற்றிருக்கும் - முருகா
ஆறுமுகம் கொண்டு காத்தருளும் - கந்தா
அல்லல் படும் எம்மைத் தெரியல்லையோ - வேலா
ஆனந்தம் அளித்திடுவாய் சந்நிதி முருகா,

குறமகள் வள்ளிக்கு வாழ்வளித்த வடிவேலனே
நிலமகள் செல்லுக்கு நடுங்குவது ஏனையனே
தந்தைக்கு மந்திரத்தை உரைத்த பாலகனே
தமிழ் மக்களுக்கு அருள் செய்ய வா வேலனே.

ஊர் விட்டு ஊரோடும் உயிர்களை காக்கவே முருகா
தேரேறி நீ இங்கு வரவேண்டும் முருகா
தீர்த்தக் கரையினிலே தீர்த்தம் ஆடி வா முருகா
தீராத வினையெல்லாம் தீர்த்து வா முருகா.

நான் இங்கு கேட்பது நடந்துவிட்டால் முருகா
நடந்தே நான் வந்திடுவேன் உன்சந்நிதிக்கு
பால்ச் செம்பு நானெடுத்து பலமுறை வணங்கிடுவேன்
வா முருகா அருள்தா முருகா.

ர. சாருஜா

பெருமனம் உள்ளவருக்கு உலகமே குடும்பம்.

உ

# ஸ்ரீ முருக மந்திரம்

## வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்

〉சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் 〈



உலகில் வாழும் மனிதர்களின் மனம் எப்பொழுதும் சலனப்பட்டுக்கொண்டும், சஞ்சலப்பட்டுக்கொண்டுமே இருக்கிறது. மனம் சாந்தியும் அமைதியும் கொள்ளாமல் தவிக்கிறது. நிலையில்லாத இன்பங்களிலே பற்று வைத்து அலைகிறது. போகிகள் மனத்தைப் புற உலக விடயங்களிலே செலுத்துகிறார்கள். தேடிய இன்பம் கிடைக்காத போது கவலையும் துன்பமும் அடைகிறார்கள். உயிர் உடலில் தங்கியிருக்கும் காலம் வரை உலகியல் இன்பங்களையே தேடித் திரிகிறார்கள் இறைவனுடைய தொண்டர்கள் நடமாடும் கோயிலாக இப் பூவுலகில் நடமாடித் திரிவார்கள். நடமாடும் கோயிலாக இருக்கும் சிவனடியார்களுக்குச் செய்யும் பணி படமாடும் கோயிலாக இருக்கும் இறைவனுக்குச் செய்யும் பணிக்குச் சமனாகும் என்பதனை

நடமாடக் கோயில் நம்பர்க்கொன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கது ஆமே.

எனத் தமிழ் மந்திரமாகிய திருமந்திரமும் செப்புகிறது. சிவ வாழ்வு வாழ்கின்ற இறை அடியவர்களுக்குப் பணி செய்தால் இறைவனோடு இணைந்திருக்கும் பேரின்பப் பேற்றைப் பெற்றுவிடலாம் என்பதனை

கடவுளைத்தவிர உயர்ந்த துணை வேறில்லை.

''அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே''
எனத் தாயுமான சுவாமிகள் தனதுபாடலிற் குறிப்பிடுகிறார்.

''யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி'' என்ற திருமூலர் வாக்கிற்கு அமையப் பகுத்துண்டு வாழும் பண்பை அறியாத அறிவிலியாகியதன்மீது கொண்ட அன்பின் காரணத்தினால் தீமையில்லாத திருத் தொண்டருடன் தன்னைச் சேர்த்துவைத்த முருகப்பெருமானின் கருணையை அருணகிரியார் வியந்து பாடுகிறார். பிறவிப் பிணியை நீக்கி, உடற் சிறையை விலக்கி வினைவிலங்கை அறுத்தெறிந்து கந்தவேட்பெருமான் தனக்குப் பரகதியை வழங்கிய சிறப்பினைப் பின்வரும் கந்தரலங்காரப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

இடுதலைச் சற்றுங் கருதேனைப் போதமிலேனை யன்பாற்
கெடுதலிலாத் தொண்டரிற் கூட்டியவா கிரௌஞ்ச வெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன் பிறவியறவிச் சிறை
விடுதலைப்பட்டது விட்டது பாசவினைவிலங்கே.

பொறுமையினால் உண்டாகும் அறிவு என்ற வாளினால் அகந்தையாகியகொடியை அறுத்தெறிய வேண்டும். பிறர்கூறும் புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் மாறுதலடையாது உள்ளம் ஒத்திருக்கும் நிலையான பண்பு பொறையாகும். முருகன் அடியார் கூட்டத்துடன் சேர்ந்திருப்பவர்கள் ''யான் எனது என்னும் செருக்கற்று'' முருகனது திருவடியநுபூதியைப் பெறுவார்கள்.

கந்தர் அநுபூதியின் 37 ஆவது பாடல் மனத்திற்கு உபதேசம் செய்யும் பாடலாகக் காணப்படுகிறது. மலை வடிவாயிருந்து இமையவர்க்கும் இருடியர்க்கும் இடுக்கண் பல புரிந்துவந்த கிரவுஞ்சம் என்ற அரக்கனை முருகன் வேலினாற் பிளந்து அழித்தருளினார். ஆன்மாவைப் பீடித்திருக்கும் மாயாமலத்தை அழித்தார் என்பது இதன் தத்துவப் பொருள் ஆகும். முருகப்பெருமானுடைய அடியவர் கூட்டத்துள் ஒருவன் ஆகும் பதவியைப் பெறுவதே உயர் பதவீ ஆகும். இப் பதவியைப் பெறுவதற்கு 'நான்' எனும் அகங்காரக் கொடியை ஞான வாளால் அறுத்து எறிய வேண்டும் என்பதைப் பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் விளக்குகிறது.

கிரிவாய் விடுவிக்ரம வேலிறையோன்
பரிவாரம் எனும் பதமேவலையே

புரிவாய் மனனே! பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே.

கலியுகவரதனாகிய முருகப் பெருமான் அளவற்ற கருணை உடையவன். தீமையே செய்தவர்களையும் தூயவராக்கி அருள் செய்து ஆட்கொள்வான். முருகப்பெருமானோடு போர் செய்ய வந்த மாயையின் மகனாகிய சூரனுக்கே திருவருளை வாரி வழங்கிய அருள் வள்ளல், அடியவர்களை என்றுமே கைவிடமாட்டான். முருகப்பெருமானின் திருவருட் கடாட்சம் கிடைத்தால் தீயவர்கள் தூயவராகி விடுவதோடு முத்தியின்பத்தையும் பெற்று விடுவார்கள் என்பதனைக் கச்சியப்பசிவாசாரியாரின் பின்வரும் கந்தபுராணப் பாடல் தெளிவாகக் கூறுகிறது

தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலை தொல்கதியடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ? அடுசமர் இந்நாள் செய்த
மாயையின் மகனுமன்றோ வரம்பிலா அருள் பெற்றுய்ந்தான்.

சாதி, குலம், செல்வம், செல்வாக்கு எல்லாம் பார்த்து முருகப்பெருமான் அருள் வழங்குவதில்லை. முத்தமிழால் தன்னை வைதாரையும் வாழவைக்கும் அருள்த் தன்மை முருகப்பெருமானிடம் உண்டு. பேய்க்கூட்டங்கள் புகழ்ந்து துதிசெய்தால் அதையும் வேதமந்திரங்களைக் கேட்பது போலக்கேட்டு முருகப்பெருமான் போற்றியருளுவார்.

''பாணிகள் கொட்டும் பேய்கள் பிதற்றும்
பாடலை மெச்சுங் கதிர்வேலா''

எனத் திருப்புகழ் இதனை எடுத்துக் கூறுகிறது.

வீண்வார்த்தைகளைப் பேசுபவனும், நன்மை ஒன்றும் அறியாதவனும், தீய குணங்களை உடையவனும் ஆகிய தன்னைக் குருவடிவாக வந்து இறைவன் ஆட்கொண்ட கருணையின் சிறப்பினை அருணகிரியார் பின்வரும் பாடலிற் போற்றித்துதிக்கிறார். வாசனையில்லாத கூதாள மலரைத் தரித்துக்கொண்டவரும், கொலைத்தொழிலைப் புரிகின்ற வேடர்குலப் பாவையாகிய வள்ளி நாச்சியாரைத் தேடிச்சென்று அருள்செய்த வள்ளலுமாகிய முருகப்பெருமான் குற்றங்கள் நிறைந்த தன்னையும் ஆட்கொண்டருளினார் என்ற சிறப்பினைப் பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் எடுத்து விளக்குகிறது.

ஆதாளியை ஒன்றறியேனை அறத்
தீதாளியை ஆண்டது செப்புமதோ
கூதாள கிராத குலிக்கிறைவா
வேதாள கணம்புகழ் வேலவனே.

பிறவிக்கு வித்தாக இருப்பது ஆசையே ஆகும். உலகில் வாழும் மனிதர்கள் பலவிதமான பண்புகளை உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். சிலர் மனித உடல்களை எடுத்திருக்கிறார்களே ஒழிய மனிதப்பண்புகள் சிறிதும் இல்லாதவர்களாகக் காணப்படுகிறார்கள். இவர்கள் ஆசை மனிதர்களாக விலங்கு மனிதர்களாகவே இருக்கிறார்கள். மனிதாபிமானத்துடன் மனிதத்தன்மையைப் பேணி வாழ்பவர்கள் அன்பு மனிதர்களாக மிளிர்கிறார்கள். தெய்வத்தன்மை பொருந்தியவர்களாகப் பிரதிபலன் எதையும் எதிர்பாராமற் பணியாற்றுபவர்கள் அருள் மனிதர்களாகத் தெய்வீக புருஷர்களாகத் திகழ்கிறார்கள். ஆசை என்னும் பாசத்தினாற் கட்டுண்டு கிடப்பவர்கள் மக்களுள் கடைத்தரமானவர்கள். இம்மையிலும் மறுமையிலும் இந்திரிய சுகங்களை நாடுதல் ஒன்றிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாயிருப்பார்கள். அவர்களது கல்வியும் கேள்வியும் சொல்வன்மையும் சிற்றின்பத்துக்கென்றே கையாளப்படுகின்றன. உலகியல் இன்பங்களைப் பெறுவது மட்டும் வாழ்க்கையின் இலட்சியமாக அமையக் கூடாது. பரிபூரண ஞானத்தைப் பெறுவதே வாழ்வின் உயர் இலட்சியமாக இருக்கவேண்டும்.

உலகில் உள்ள எல்லாச் சமுத்திரங்களையும் கடந்து விடலாம். ஆனால் பிறவிப் பெருங்கடலைக் கடப்பது மிகவும் சிரமமான காரியம் ஆகும். ஏழு கடல்களைப் போலவே தேவர், மனிதர், விலங்கு பறவை ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் ஆகிய ஏழுவகைப் பிறப்புக்களும் காணப்படுகின்றன. தனு, கரண, புவன, போகங்கள் உட்பட முப்பத்தாறு தத்துவங்களும் மாயையில் இருந்தே தோற்றம் பெற்றன என்று சைவசித்தாந்தம் கூறுகிறது. தனேடணை தாரேடணை, புத்திரேடணை ஆகிய மூன்றையும் மூவேடணை எனக் கந்தரநுபூதி குறிப்பிடுகிறது. செல்வம், மனைவி, புத்திரர்கள் என்பவற்றின் மீது வரும் பற்றினாலேயே எழுவகைப் பிறப்புக்களும் உண்டாகின்றன. அநுபூதிக்கு ஆசைகள் தடை ஆதலால், ஆசைகளை விட்டு முருகன் அநுபூதியைப்பெறமுயற்சிக்கவேண்டும் என்று கந்தர் அநுபூதியில் அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார்

பிறர் உனக்கு உதவியதை மறக்காதே.

வேதத்தின் நடுநாயகமாக விளங்குவது சிவ மூலமந்திரமாகிய பஞ்சாட்சர மந்திரம் ஆகும். "திரயீவித்யா" என்று அழைக்கப்படும் மூன்று வேதங்களில் நடுவில் இருப்பது யசுர் வேதம் ஆகும் யசுர் வேதத்தின் நடுவில் இருப்பது ஸ்ரீருத்ரம் ஆகும். ஸ்ரீருத்ரத்தின் மையத்திற் காணப்படும் மந்திரம் "நமசிவாய ச சிவதராய ச" என்பதாகும் மங்கள வடிவினரும் தம்மை அடைந்தவர்களையும் மிக மங்கள வடிவினர் ஆக்குபவருமாகிய உருத்திரனுக்கு வணக்கம் என்பது இதன் பொருள் ஆகும். சிவம் என்பதன் பொருள் மங்களகரமானவன் என்பது ஆகும். சிவ என்று கொடிய சண்டாளன் கூறினாலும் அவனுடன் பேச வேண்டும், அவனுடன் வசிக்க வேண்டும், அவனுடன் புசிக்க வேண்டும் என்றே முண்டக உபநிஷதம் கூறுகிறது.

எழுவகையான பிறவிகளும் நீங்கவும், மாயையினால் தோன்றிய மூன்று வகையான ஆசைகளும் அடியனாம தன்னைப் பற்றாது அகலவும் முருகப்பெருமானின் திருவருள் துணை கிடைக்க வேண்டும் என்று அருணகிரியார் பிரார்த்திக்கிறார். உலகங்களெல்லாம் அரசராகவும், குறவர் குலத்தில் வளர்ந்த மின்னற்கொடிபோன்ற வள்ளிநாயகியின் தோள்களைத் தழுவுகின்ற தெய்வமாகவும், மங்கலமூர்த்தியும், சுகத்தைச் செய்பவருமான சிவமூர்த்தியின் குருநாதராகவும், திகழ்கின்ற கந்தவேட்பெருமானின் அருட்கடாட்சம் கிடைத்து விட்டால் உலகியற் பற்றுக்களை நீக்கிச் சிவாநுபூதியைப் பெற்று விடலாம் என்பதனைப் பின் வரும் கந்தரநுபூதிப் பாடல் விளக்குகிறது.

மாவேல் சனனம் கெடமாயைவிடா
மூவேடனை என்று முடிந்திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணரும்
தேவே சிவசங்கர தேசிகனே.

ஆன்மாக்களின் வினைகள் மாயும் பொருட்டு முருகப்பெருமானின் ஞானசக்தியாகியவேல் அருள்புரியும் 'வேலுண்டு வினையில்லை. மயிலுண்டு பயமில்லை' என்பது முருகஉபாசகர்களின் நம்பிக்கை ஆகும். வேலை வழிபடுவதையே வேலையாகவுடைய அடியார்க்கு வினைகள் தொடரமாட்டா. அந்நியர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்திற் சைவ மரபு அழிந்துவிடாமற் காப்பாற்றிய பெருமை முருகப் பெருமானின் ஆற்றலை வெளிப்படுத்தும்ஞானசக்தியாகியவேற்படையினாலும், சிவனுடைய அஸ்திரமாகிய சூலத்தினாலும் என்பது வரலாறு அறிந்த அனை

அடுத்தவர் சொல்லுவதைக் கவனிக்கப் பழகுங்கள்.

வருக்கும் தெரிந்தவிடயம் ஆகும். வழிபாட்டு உரிமைகள் மறுக்கப் பட்ட அந்தக்காலத்திற் சைவ மக்கள் தமது இல்லங்களிற் வேலை வைத்துக், கந்தபுரா ணத்தைப் படித்து முருகப்பெரு மானை வழிபாடு செய்து வந் தார்கள். ஆற்றல் கொண்ட மைந்த வேல், வடிவு ஒழுகும் வேல், தேவர்களைச் சூரனுடைய சிறைக்கூடத்திலிருந்து மீட்ட வெற்றிவேல், செம்மை நிறம் சேர்ந்த முருகப்பெருமானுடைய அழகிய கையினிலே அமர்ந்திருக்கும் வேல், பகைவரை அழித்த கறை நீங்கக் கடல்நீரிலே முழுகி எழுந்த வேல், வெற்றியையும் காரியசித்தியையும் தரும் வெற்றி வேல், சூரனுடைய மார்பைக் கிழித்து அவனைக் காத்துத் தடுத்து நின்ற கிரௌஞ்ச மலை யையும் துளைத்துப் பிளந்த வேல், அதுவே எமக்கு என்றும் துணையான வேல் என்று வேலின் பெருமையை மறைத் திரு ஞானியாரடிகள் பின்வரு மாறு போற்றுகிறார்.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேடிருக்கை வேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்த வேல் உண்டே துணை.

முருகப்பெருமான் தன்னை நோக்கித் தவம் செய்த பக்குவ ஆன்மாவாகிய வள்ளிநாச்சி யாரை ஆட்கொள்ளும் பொருட் டுச் சுனையிடத்தும், மலை அரு விகள் விழும் துறைகளிடத்தும், பசிய தினைப்புனத்திடத்தும், பரணிடத்தும் தேடித்திரிந்தார். ஆன்மாக்களின் வினைகள் விலகு மாறு செய்யும் தன்மையுடைய வேலாயுதத்தை அடியேன் ஒரு போதும் மறக்கமாட்டேன். வேலாயுதப்பெருமானை நினைத்து வாழ்வை நடாத்து கின்ற தான் சம்சாரசாகரத்தில் அமிழ்ந்தித் தன் வாழ்நாளை வீழ்நாள் ஆக்கலாமா? அம்மயக் கம் நீங்கி நல்வாழ்வு பெறத் தனக்கு அருள்செய்ய வேண்டும் என்று வேண்டுவதை நாற்பதா வது கந்தரநுபூதிப் பாடல் பின் வருமாறு எடுத்து விளக்குகிறது.

வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ
சுனையோடருவித் துறையோடு பசுந்
தினையோ டிதனோடு திரிந்தவனே.

[தொடரும்—

எந்தச் சந்தர்ப்பத்திலும் உத்தமனாகவே இரு.

[ தொடர்ச்சி... —



யாழ் / தொண்டைமானாறு

## ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன்

# திருத்தல புராணம்

### சி. விநாசித்தம்பிப்புலவர் அவர்கள்

வெருவரச் சீடர் தம்மை விரட்டிய வேழந் தன்னைக்
குருமுனி சிகண்டி கண்டான் குமரவேள் தன்னை யுன்னி
திருவின்வெற் றிலையொன் றேந்திச் செய்யவேல் நாமம் சொல்லி
பொருகென விட்டபோதில் பொலிந்தது முருகன் தோற்றம். 31

விருப்புறச் செபித்து விட்ட வெற்றிலை வேலைத் தாங்கும்
பொருப்பெழு குமர னாகிப் புகல்முனிக் கருள்பு ரிந்து
செருப்பொலி யானை யாய தீயகந் தருவ னுய்ய
மருப்புதுக் கடம்பத் தாரான் வாசக முரைக்க லுற்றான். 32

வந்தகந் தருவ னேநீ மருவிய யானைச் சாபம்
இந்தநற் கணமே நீங்கி, இலங்கையின் வடபால் நம்மைச்
சந்தியிற் சுரர்பூ சித்த தலமதை நண்ணி முத்திச்
சுந்தரம் பெறுகவென்று தோகைவேல் மறைந்தான் அன்றே. 33

ஐயனின் அருள்வாக் கைக்கொண் டணிஇரா வசுவு மாண்டு
கைவிலங் காய தோற்றம் கடிதினி னீங்கி யன்பிற்
கைகுவித் தழக னாமம் கருத்துற வழுத்தி முந்திச்
செய்தவம் பலித்த தென்னச் செல்வச்சந் நிதிவந் துற்றான். 34

கண்டனன் கண்க ளாலே கந்தனின் கழலைத் தேவர்
தொண்டர்கள் பூசை செய்து துதிதரும் சிலையை யாங்கு
மண்டலங் குளிர வேழ மகள்தரு வல்லி யாற்றைக்
கொண்டனன் மனித ரூபம் குறித்தபேர் முருக நாகர். 35

[ தொடரும் — —

பேச்சை விட சிந்தனை ஆழமானது.

உ

# சந்நிதியான்

〉 ந. அரியரத்தினம் 〈



மருதர் கதிர்காமர் தான் அடியார்களுக்கு எவ்வாறு திருநீற்றை வழங்குவது என்றுகலங்கி நின்ற பொழுது சந்நிதி முருகன் திருநீற்றுத்தட்டை கதிர்காமரை எடுக்குமாறும் அடியார்களுக்கு திருநீறு வழங்கும் செயலைத் தானே மேற்கொள்வதாகவும் வாக்குக்கொடுத்திருந்தார் அதன் படியே மருதர் கதிர்காமர் திருநீற்றுத்தட்டைக் கையில் எடுத்ததாகவும் திருநீறு வழங்கும் செயலைச் சந்நிதியானே தோன்றாத் துணையாக நின்று செயற்படுத்தினார் என்றும் நம்பப்படுகிறது ஆம்! சந்நிதியில் இன்றும் இடம் பெற்றுவரும் நடைமுறைகள் மேற்படி நிலைமைகளை எமக்கு வெளிப்படுத்துபவையாகவே அமைந்திருப்பதை எம்மால் உணர முடிகின்றது.

சேவை செய்பவனிடம் வேற்றுமை கிடையாது.

பூசை முடிவடைந்து மூலஸ்தானத்திலிருந்து திருநீற்றுத்தட்டுடன் வருபவர் பூசகர் அல்லர் சந்நிதியான்தான் பூசகர் வடிவத்தில் வருகிறார் என்ற நம்பிக்கை இன்றும் பேணப்படுகிறது. இந்த நம்பிக்கையினடிப்படையிலேயே பூசகருடைய பாதங்களைத்தொட்டு வணங்குதல் அல்லது அவருடைய பாதங்களில் விழுந்து வணங்குதல் என்ற வழமை உணர்வு பூர்வமாக இன்றும் பேணப்பட்டு வருகிறது.

பூசை முடிவடைந்த நிலையிலும் திருநீறு வழங்குகின்ற செயற்பாட்டையும் பூசையின் ஒரு அங்கமாகவே நினைத்துப் பூசகர்கள் நிறைவேற்றி வருகின்ற செயற்பாட்டை நாம் சந்நிதியிற் காண முடியும். பூசையை நடாத்தும் பொழுது எவ்வாறு வாய்கட்டிச் செயற்பட்டார்களோ அதே கோலத்துடன் தான் திருநீறு வழங்குகின்ற செயற்பாட்டையும் மேற்கொள்வார்கள்.

பூசகருடைய பாதங்களைத் தொட்டு வணங்குவது மட்டுமன்றிப் பூசகரிடமிருந்து திருநீற்றைப் பெற்றுக்கொள்ளும் பொழுதும் தலை குனிந்து மிகவும் பயபக்தியுடன்தான் அடியார்கள் திருநீற்றைப் பெற்றுக் கொள்வார்கள். பூசகர்களும் தாம் யாருக்குத் திருநீறு வழங்குகின்றோம் என்ற சிந்தனையை விடுத்து சந்நிதியானை மனத்தில் தியானித்தபடி முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் வெளிப்படுத்தாது அனைத்து அடியார்களுக்கும் திருநீற்றை வழங்கிச் செல்வார்கள். மேலும் தமது பாதங்களைத் தொட்டு வணங்குகின்ற அடியார்களுக்கு அவர்களுடைய சிரசில் திருநீறு இட்ட பின்பே அவர்களின் கைகளில் திருநீறு வழங்கும் நடைமுறையையும் பூசகர்கள் மேற்கொள்வார்கள்.

ஆலயத்தின் குருவை விழுந்து வணங்குதல், குருவின் பாதங்களைத் தொட்டு வணங்குதல் என்பன பொதுவாக இன்று வேறு ஆலயங்களிற் கடைப்பிடிக்கப்படாத அம்சம். ஆனாலும் சந்நிதியில் அடியார்கள் இவ்வாறு ஆலயப்பூசகருடைய பாதங்களை வணங்குகின்ற செயற்பாட்டை உண்மையான உள்ளுணர்வுடனும், உண்மையான பக்தியுடனுமே மேற்கொண்டு வருகின்றனர். அதுமட்டுமன்றி அவ்வாறு வணங்குவதன் மூலமே அவர்கள் வழிபாட்டின் முழுமையான திருப்தியையும், நிறைவையும் பெற்றுக்கொள்கின்றனர் என்பதையும் நாம் தெளிவாகக் காண முடிகின்றது.

ஆலயத்தின் வரலாற்றையும் அங்குள்ள நடைமுறைகளையும் அறிந்த ஆலயச்சூழலில் வாழ்கின்றவர்களும், ஆலயத்துடன் மிகக்கூடிய தொடர்புள்ளவர்

எளிமையைப் பின்தொடர்ந்து மகிழ்ச்சி வருகிறது.

களுமே கூடுதலாக இத்தகைய வழிபாட்டு முறையைக் கடைப் பிடித்து வருகின்றனர். ஆனாலும் இத்தகைய நடைமுறையைப் பார்த்துத் தாமும் அவ்வாறு வணங்க வேண்டும் என்று வணங்குகின்ற அடியார்களும் இங்கே காணப்படுகின்றனர்.

பெற்றோரை வணங்குதல், பெரியாரை வணங்குதல், குருவை வணங்குதல் என்பன எல்லாம் காலம் காலமாக எமது சமயத்திலும் பண்பாட்டிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற செயற்பாடுகளாக இருந்துவந்துள்ளன. எமது பண்பாட்டிலும், சமயத்திலும் பேணப்பட்டு வருகின்ற இவை போன்ற உயர்ந்த பண்பாட்டு அம்சங்களை வேற்று இனத்தவர்களும், மதத்தவர்களும் வியந்து பாராட்டியது மட்டுமன்றி எம்மைப் பின்பற்றி அவர்களும் இந்த நடைமுறைகளைக் கைக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

எமது நாட்டிற் சகோதர இனத்தவர்களான சிங்களவரும், பௌத்தமதத்தினரும் இன்றும் இந்த நடைமுறையைப்பின்பற்றி வருகின்றனர். அது மட்டுமன்றிப் பௌத்த மகா நாயக்கர்களை நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்று நடாத்தும் உயர் நிலைத் தலைவர்களே அவர்களின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி வருவதையும் காணமுடிகின்றது.

ஆனால் இந்த உயர்ந்த பண்பாட்டிற்கு மூலகாரணமாக இருந்ததுமட்டுமன்றி இந்த நடைமுறைகளைப் பின்பற்றித் தமது வாழ்க்கையைச்செம்மைப்படுத்தி வாழ்ந்து வந்த எமது இனமும் மதமும் இன்று இவற்றை மறந்து செயற்படுவதுடன். இந்த நடைமுறைகளைப்பின்பற்றுவது நாகரிகமற்ற செயல் என்றும் சிந்திக்கின்றார்கள் போல் தோன்றுகின்றது.

உண்மையான ஆத்மீகவாதிகளும், மற்றும்சமூகஅறிஞர்களும் மேற்கூறிய பல நல்ல பண்புகள் எமது சமயத்திலும் பண்பாட்டிலும் அருகி வருவதுதான் எமது சமூகச்சீரழிவிற்கும் குழப்பமான சூழ்நிலைக்கும் காரணமெனச் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் சந்நிதியிற்பேணப்பட்டுவருகின்ற நடைமுறைகளும், பக்தி உணர்வுகளும் தனிமனித வாழ்க்கைக்கு மட்டுமன்றிச் சமூகத்தின் உயர்விற்கும் உதவக்கூடியவையாகும்.

சந்நிதி ஆலயம் எமது மண்ணுக்கும், மக்களுக்கும் கிடைத்துள்ள ஒரு பொக்கிஷம். கலியுகக் கந்தனின் பேரருள் அங்கே பொங்கி வழிகின்றது. அங்கே இல்லாததும் எதுவுமில்லை, கிடைக்காததும் எதுவுமில்லை.

ஓம் முருகா!

மதுவும் மாதுவும் தீமையின் அடிப்படை.

உ

# பங்குனி உத்தரத் திருநாளிலே

ஆம், அன்று 06-04-2001 வெள்ளிக்கிழமை; பங்குனி உத்தரத் திருநாள். பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைச் சைவ மாணவ மன்றம் சந்நிதியான் ஆச்சிரம, சைவ, கலை, பண்பாட்டுப் பேரவையின் அனுசரணையுடன் விழா எடுத்துவரும் திருநாள். அன்று சந்நிதியான் ஆச்சிரமம் விழாக்கோலம் பூண்டிருந்தது.

அருள்மிகு சந்நிதி வேலவருக்கு, விசேஷ அபிஷேக, ஆராதனைகளின் பின் விழா கோலாகலமாக, விழாத் தலைவரும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளரும் ஆகிய திருமதி கோதை நகுலராசா அவர்கள் மங்கள விளக்கேற்ற, தேவார பாராயணத்துடன் ஆரம்பமானது.

சைவ மாணவ மன்றத் தலைவர் திரு. செ. ஜெயகாந்தன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். ஆசியுரை வழங்கிய பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதியர் திரு. கு. சதாசிவமூர்த்தி அவர்கள் பங்குனி உத்தரத் திருநாளின் மகிமையை எடுத்துரைத்தார்கள்.

அதனை அடுத்துச் சிறப்புரை வழங்கிய பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளர் திரு. ஆ. மகாதேவன் அவர்கள் தமது உரையில் பர்வதராஜன் திருமகளாக வந்துதித்த பார்வதி தேவியாரைப் பரமசிவனார் திருமணம் செய்துகொண்ட வரலாற்றினைப் பக்திபூர்வமாக எடுத்து விளக்கினார்கள்.

அதன்பின் ''சைவ சமயத்துக்கு மேலான தொண்டாற்றி வருபவர்கள்'' ஆண்பாலரா, பெண்பாலரா? என்னும் தலைப்பிலான பட்டிமன்றம், கலாசாலை மாணவ,மாணவியர்களால் விறுவிறுப்பாக நிகழ்த்தப்பட்டது. அதற்குரிய நடுநிலை வகிப்பவராக பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை முன்னாள் அதிபரும், கவிஞருமாகிய திரு. சோ. பத்மநாதன் அவர்கள் செயலாற்றி சபையை சிறப்பித்தார்கள்.

அதன்பின் கலாசாலை மாணவியர் திருப்புகழ்ப் பாடல்களைப் பண்ணோடு இசைத்துச் சபையினரைப் பக்தி பரவசத்துக்கு உள்ளாக்கினார்கள்.

அதன் பின்னர் சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவையின் செயலாளரும் தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலய அதிபரும் ஆகிய, திரு. ந. அரியரத்தினம் அவர்களால் நன்றியுரை கூறப்பட்டது.

விழா முடிவில் மாகேசுர பூஜை சிறப்பாக நடைபெற்றது.

உ

தவத்திரு

# வே. முருகேசுவாமி அவர்களின்

## நான்காம் ஆண்டு குருபூசைத் தினம்

மேற்படி சுவாமி அவர்களின் நான்காம் ஆண்டு குரு பூசை 01-04-2001 ஞாயிற்றுக்கிழமை மிகவும் சிறப்பான முறையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது. அன்று காலை ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்ற விஷேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் குருபூசைத்தின நிகழ்வுகள் ஆரம்பமாயின. ஆரம்பத்தில் தேவார பாராயணத்துடன் ஞானபண்டித சேவாசுரபி Dr. சி. கதிரவேற்பிள்ளையினதும், இளைப்பாறிய உதவி அரச அதிபர் சி. முருகேசம்பிள்ளை அவர்களினதும் சிறப்புரைகள் இடம் பெற்றன. அதனைத்தொடர்ந்து '' நீறுதந்த முருகேசன் '' என்ற பொருளில் பண்டிதர் சி. வேலாயுதம் அவர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள். '' குருவாய் வருவாய் '' என்ற விடயத்தை அன்னை தாசன் கவிமணி க. ஆனந்தராசா பக்கவாத்தியசகிதம் இசைச்சொற் பொழிவு ஆற்றி சபையில் உள்ளவர்களை மெய்மறக்கச்செய்தார்கள்.

முருகேசுசுவாமி அவர்கள் இருக்கும் காலத்தில் 63-வர் குரு பூசைக்கு முதலிடம் கொடுத்து தன்னை அண்டி வருவோரை 63-வர் குருபூசை செய்யும்படி வற்புறுத்திக் கூறுவார்கள். அவரின் செயற்பாட்டிற்கு அமைவாக சந்நிதியான் ஆச்சிரமத்தில் சுவாமி அவர்களின் அன்பர்கள் சுவாமியின் நினைவாக கட்டிய 63-வர் பூசை மண்டபத்தில் 63-வர் பூசையும் மிகவும் சிறப்பான முறையில் இடம் பெற்றன. இறுதியாக சுவாமி அவர்களின் அன்பர்கள் சார்பில் ஆ. அருணாசலம் விழாவினை நிறைவு செய்தார்கள்.

**03 - 06 - 2001 ஞாயிற்றுக்கிழமை வழமைபோல் வைகாசிப் பெருவிழா இடம் பெறும்.**

# வைகாசி மாத வாராந்த நிகழ்வுகள்

04 - 05 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திரு. க. சிவக்கொழுந்து J. P.

சொற்பொழிவு : 'மானிட வேள்வி'

வழங்குபவர் : பண்டிதர், சைவப்புலவர் சிவஸ்ரீ கை. நமசிவாயக்குருக்கள்

---

11 - 05 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திரு. S. வெற்றிவேலாயுதம்

விடயம் : 'இன்னிசை'

வழங்குபவர்கள் : நிலானி யோகரெத்தினம் (விரிவுரையாளர், யாழ். நுண்கலைப்பீடம் இ. துறை)

வயலின் : செல்வி பாக்கியலெட்சுமி நடராசா (விரிவுரையாளர், யாழ் நுண்கலைப்பீடம் இ. துறை)

மிருதங்கம் : திரு. நித்தி மதிரூபன் (ஆசிரியர்)

---

18 - 05 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திரு. பொ. அருந்தவநாதன் (விரிவுரையாளர், யாழ். கல்லூரி வட்டுக்கோட்டை)

சொற்பொழிவு : 'திருமந்திரம்' (தொடர்)

வழங்குபவர் : திரு. அ. குமாரவேல் (விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

25 - 05 - 2001 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு

# வைகாசி - 2001

வெளியீட்டுரை : பிரம்மஸ்ரீ. ச. வைத்தியநாதக் குருக்கள் (பிரதமகுரு. கந்தவனப்பதி)

மதிப்புரை : சிவஸ்ரீ தி. சோமாஸ்கந்தராசாக்குருக்கள் (ஆசிரியர், ஹாட்லிக்கல்லூரி)

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் (2001 ஜனவரி - ஒக்டோபர்) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அது பற்றிய முடிவுகள் 2002 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்க் குழு :

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

**செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.**